www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

நவம்பர் - 2002
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

மதமாற்றத் தடைச்சட்டம் எதிர்ப்புச் சிறப்பிதழ்



சுயமரியாதையுள்ள
சூத்திரர்களே, தலித்துகளே

## இந்து மதத்தைவிட்டு வெளியேறுங்கள்!

படிப்பகம்

www.padippakam.com




● அக்டோபர் மாத இதழில் ''குஜராத்: இந்துத்துவத்தின் சோதனைச்சாலை'' என்ற தோழர். மருதையன் அவர்களின் கட்டுரையில், இந்து மத வெறியின் வரலாற்று ரீதியான வளர்ச்சியைப் புரிந்து கொள்ள முடிந்தது. போலிக் கம்யூனிஸ்டுகளும் 'பிறரும் காந்தி பிறந்த மண்ணிலா' என ஒப்பாரி வைப்பதோடு நின்று கொள்வதும், பிற ஜன நாயக சக்திகள் ''மதவெறியை முறியடிப்பது'' என பொதுவாகவும், குறிப்பாகவும் பேசினாலும் ''இன்றைய குஜராத்'' பற்றி மட்டுமே பேசிவிட்டு செல்கிறனர்.

**— புரட்சித்தூயன், தருமபுரி.**

● நல்லகாமன் கதை படித்தேன். எஸ்.ஐ.பிரேம்குமாருக்கு எதிராக 212 பேர் வரை சாட்சி சொல்லியுள்ளார்கள். ஆனால் இந்த வழக்கு குப்பைக் கூடைக்குப் போய் இன்று அந்த எஸ்.ஐ. எஸ்.பியாகிவிட்டு ''எம்மேல் ஏற்கனவே 10 கேஸ் இருக்கு. எந்த கோர்ட்டும் என்... கூட புடுங்க முடியாது'' என்று சொல்கிறான். இந்திய அதிகார வர்க்கத்தினர் ஒரு பானை சோறு என்றால் இந்த எஸ்.பி ஒரு சோறுதான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**— பெத்தண்ணன், சேடப்பட்டி.**

● துரை.சண்முகம் அவர்களின், 'சாமி பெயருக்கு ஒரு அர்ச்சனை,' சாஷ்டாங்கத் தமிழர்களுக்கு நல்ல சவுக்கடி. குஜராத் - இந்துத்துவத்தின் சோதனைச்சாலை கட்டுரையில் இந்திராவின் பாசிசம் மதவாத நாஜிகளுக்கும் ஒளிவட்டம் கொடுத்தது என்ற வரிகள் சிறப்பானவை.

**— செம்மலர் மா.நடராசன், அறந்தாங்கி.**

● கட்டுரையைப் படிக்கும்போது துவக்கத்திலேயே 'நல்ல காமன் கதை'-நல்ல தங்காள் கதை என அசப்பில் ஒலிக்கக்கூடும் என்று எழுதியிருந்தது சரியானதுதான். 'கூடவே கண்ணீரும் வரக்கூடும் என்று சேர்த்தே எழுதியிருக்கலாம் என்று தோன்று கிறது. அந்த முதியவரின் வைராக்கியமிக்க இருபது ஆண்டு போராட்டமும், அவலமும் ஒவ்வொரு வாசகரும் உணரவேண்டிய பாடம். பிரேம்குமார் போன்ற ரவுடிகள், எஞ்சிய காலத்தை நிம்மதியில்லாமல் கழிக்கவேண்டும். அப்படி நடக்கும்படி நாம் உதவினால்தான் நமது உணர்விற்கு நாம் செலுத்தும் மரியாதையாக இருக்கும்.

**— பரமசிவம், சென்னை.**

● நான் தங்களது இதழ்களை கடந்த இருவருட காலமாகப் படித்து வரும் வாசகன். தங்களது இதழில் வரும் புரட்சிகர கட்டுரைகளையும், உண்மைச்சம்பவங்களையும் அறிந்து தெளிந்துள்ளேன். மேலும் கொஞ்சம் கொஞ்சமாக என்னைத் திருத்திக் கொண்டுள்ளேன். அமெரிக்காவின் ஏகாதிபத்திய வெறியையும், அந்நாட்டின் காலனியாதிக்க அட்டூழியங்களையும் தங்களது இதழ்களின் வாயிலாகத் தெளிவாக அறிய முடிகிறது. குஜராத் கலவரத்தில் நடைபெற்ற கொடுமைகளை, தங்களது இதழில் மட்டுமே வெளியான ஆதாரபூர்வமான கட்டுரைகளைக் கண்டு ஆவேசப்பட்டேன். இவற்றினை ஒவ்வொரு இளைஞனும் அறிந்து கொள்ளுதல் அவசியம். நானும் என்னால் முடிந்த அளவு இத்தகைய சம்பவங்களை என்னுடனிருக்கும் இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டி விளக்கி வருகிறேன்.

**— கா.தாமோதரன், சிவந்திபுரம், நெல்லை மாவட்டம்.**

## கனடாவில் ''இசை'' நூல் விமர்சனம்

● 24.08.2002 அன்று கனடா நாட்டின் ஸ்கார்பொரோ (Scarborough) நகரில் - புதிய கலாச்சாரத்தின் வெளியீடான **''இசை: போதை, பொழுதுபோக்கு, போராட்டம்''** எனும் நூல் மீதான விமர்சனமும் பறை பற்றிய கலந்துரையாடலும் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. டன்ஸ்ரன் ராபேர்டின் எனும் இசையறிஞர் நூல் மீதான விமர்சனக் கட்டுரையை எழுதியிருந்தார். அக்கட்டுரை திரு.அ. சொக்கலிங்கம் அவர்களால் வாசிக்கப் பட்டு பின் கலந்துரையாடப்பட்டது.

தமிழிசை குறித்தும், அது திருடப்பட்டது குறித்தும், இன்றைய சமூகத்தின் இசை ரசனை குறித்தும் நூல் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்வதாகத் தெரிவித்த திரு. டன்ஸ்ரன் தமிழிசை அழியாமல் காக்க கனடாவில் வாழும் ஒவ்வொரு கலைஞனும் கலை ஆர்வலரும் செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார். ''பறை'' குறித்த ஆய்வுக்கட்டுரையை தோழர். தவபாலன் உரையாற்றினார். நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முற்போக்கு சிந்தனை கொண்ட நண்பர்கள் கலந்துகொண்டனர். அடுத்த ஆண்டு கோடை விடுமுறையில் பறை அடிக்க பயிற்சியளிக்கும் 5 நாள் பட்டறை ஒன்றை ஒழுங்கு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

— செய்தி: **தோழர். தவபாலன், ஒன்டாரியோ, கனடா**

## பிரான்சில் தீக்கொழுந்து

*நிழல்* - சினிமா இதழ் மற்றும் *நண்பர்கள் வட்டம்*, பிரான்சு ஆகியோர் இணைந்து நடத்திய சர்வதேச தமிழ்க் குறுந்திரைப் படம் மற்றும் ஆவணப்பட விழா 29.09.2002 அன்று பாரிசில் நடந்தது. இதில் ஆவணப்படப் பிரிவில் **பார்வையாளர்களால் சிறந்த படமாக,** *புதிய கலாச்சாரத்தின்* **''தீக்கொழுந்து''** தெரிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக பாரிசிலிருந்து ஒரு கடிதம்.

''தீக்கொழுந்து திரையிடல் ஆரம்பித்தபோது - அதன் முதல் பாகத்தை காண்பிக்கவில்லை. இரண்டாம் பாகமும் இடையிலேயே நிறுத்தப் பட்டது. இதைக் கண்டித்து போராட வேண்டிய நிலை எமக்கு ஏற் பட்டது. நிகழ்ச்சியை நடத்தியவர்கள், பார்வையாளர்களுக்கு இப்படம் அலுப்பூட்டுவதாக அவதூறு செய்தனர்.

இப்படம் தேயிலை விவசாயிகளின் போராட்டம் பற்றிய ஒரு களச் சித்திரம். சிறு விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்களின் கூலித் தொழிலாளர்கள் மற்றும் இலங்கையிலிருந்து வலுக்கட்டாயமாக நாடு கடத்தப் பட்ட மலையகத் தொழிலாளர்கள் ஆகியோரின் வாழ்க்கைப் போராட் டத்தைச் சித்தரிக்கின்றது; உலகைச் சூறையாடும் ஏகாதிபத்திய பன் னாட்டு நிறுவனங்களின் கோரமுகத்தை அம்பலப்படுத்துகிறது. வாழ் வுக்காகப் போராடும் மக்களின் உள்ளக் குமுறலுடன் கூடிய உண்மை முகத்தைக் காணச் சகிக்க முடியாதவர்கள் படத்தை துண்டு துண்டாக தணிக்கை செய்தனர். இருப்பினும் இத்தனை அராஜகங்களையும் மீறி பார்வையாளர்கள் சிறந்த ஆவணப்படமாக தீக்கொழுந்தை தெரிவு செய்தனர். அறிவிக்கப்பட்ட முதல் பரிசுத் தொகையை அப்படம் பெற்றது. அப்போது அந்தப் படத்தை தணிக்கை செய்து நிறுத்திய ஒரு 'ஜனநாயகவாதி' படத்தை முழுமையாகப் பார்க்காமலேயே படம் தெரி வாகிவிட்டதா என்று தன்னையும் மீறி பலத்த குரலில் ஒப்பாரி வைத் தார்.''

**- தோழர் பி.இரயாகரன், சமர் பத்திரிகை , பிரான்சு.**


படிப்பகம்

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 20
• குரல்: 6
• நவம்பர் - 2002

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com
தொ.பேசி எண்: 044-3718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

## அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராட்டம்
# தலைமையின் அரசியல் வறுமையால் தோல்வி

ஜெயலலிதாவின் பேயாட்சிக்கு எதிரானப் போராட்டங்கள் அனைத்திலும் மிகவும் நம்பிக்கையூட்டியவை, கல்லூரி ஆசிரியர்கள்-மாணவர்கள் மற்றும் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் போராட்டங்கள். அவை இரண்டுக்கும் தலைமை வகித்தவர்களின் அரசியல் வறுமை அல்லது அரசியல் ஓட்டாண்டித்தனம்தான் அவற்றின் பின்னடைவுக்குக் காரணம். ஜெயலலிதாவின் பேயாட்சி தொடுத்தப் பொருளாதார ரீதியிலான தாக்குதலைவிட, அரசியல் ரீதியிலான தாக்குதல்களுக்கு – சண்டித்தனங்களுக்கு போராட்டத்தலைமை முகங்கொடுக்க முடியாமல் சரணடைந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

''இந்தப் போராட்டங்கள் எல்லாம் அரசியல் ஆதாயத்துக்காக எதிர்க்கட்சிகளின் தூண்டுதலால் நடத்தப்படுகின்றன. உள்நோக்கத்துடன் அரசியல்படுத்தப்படுகின்றன'' என்கிற ஜெயலலிதாவின் குற்றச்சாட்டுக்கு வழக்கம்போல மிரண்டு போனார்களே தவிர, தக்க பதிலடி கொடுக்கவே இல்லை. தற்போது அரசியல் கலவாத பிரச்சினைக்காகவா போராட்டங்கள் நடக்கின்றன? அரசு மேற்கொள்ளும் நிர்வாக, பொருளாதார நடவடிக்கைகளுக்கு எதிரானதாக இப்போராட்டங்கள் இருக்கும் போது – ஒரு ஆலை நிர்வாகம் – தொழிலாளர் சம்பந்தப்பட்ட தொழில் – பொருளாதார உறவு பற்றிய பிரச்சினையைப் போன்று - எப்படி இருக்க முடியும்?

அரசியல் என்றாலே, தேர்தல் ஆதாயம் கருதி அரசியல் கட்சிகள் ஈடுபடும் நடவடிக்கைகள் என்று அரசியலற்ற பிழைப்புவாத நடுத்தரவர்க்க வாசகர்கள் – பார்வையாளர்களைக் கொண்ட செய்தி ஊடகம் பரப்பும் கொச்சைத்தனமான கருத்தை அரசு பயன்படுத்திக் கொண்டுள்ளது. ''எந்தப் பிரச்சினையையும் அரசியலாக்கக்கூடாது, அரசியல் நோக்கங்கள் கலக்கக் கூடாது'' என்கிற வாதம் ஏதோ, பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்ட பொதுநலன் கருதி வைக்கப்படுவதில்லை. ''யாரு எக்கேடு கெட்டுப்போனால் என்ன? என் பிரச்சினைதான் முக்கியம்'' என்கிற பிழைப்புவாத, சுயநலனுக்காக வைக்கப்படும் வாதம். இந்த சுயநல பிழைப்புவாத அரசியலற்ற பிரிவினரைத் தனது சமூக ஆதரவு சக்திகளாகத் திரட்டிக் கொள்வதில் அரசும் ஆளும் கட்சியும் வெற்றிபெற்றுவிட்டது.

''எந்தவொரு பிரச்சினையையும் அரசியல் ஆக்குவதில் தவறில்லை. நடப்புப் பிரச்சினைகளில் தமது நிலைப்பாட்டினை முன்வைத்துப் போராடி, மக்கள் செல்வாக்குப் பெறுவதுதானே அரசியல் கட்சிகளின் வேலை. எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, ஆளும் கட்சியும் அப்படித்தானே செல்வாக்குப் பெறமுடிகிறது. அரசு நடவடிக்கைகளும் ஒரு ஆளும் கட்சியின் கொள்கை நிலைப்பாடு அடிப்படையில்தானே எடுக்கப்படுகிறது. நடப்புப் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி நின்று செயல்படுவதற்குத்தான் அரசியல் கட்சிகள் இருக்கின்றனவா?'' என்று கேட்டு அரசியலற்ற வாதத்தை முறியடித்து, சமூக ஆதரவைப் பெறுவதில் போராட்டத்தலைமை தோற்றுப்போனது.

உண்மையில் போராட்டத் தலைமையும் அது தலைமையேற்கும் பல்வேறு பிரிவு மக்களும் அரசியலற்றதாக உள்ளனர். இந்த அரசின் பல்வேறு மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கும் மூலாதாரமாக உள்ளது, அதன் அரசியல் – பொருளாதாரக் கொள்கைகள்தாம்; அவை, உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம் முதலிய ஏகாதிபத்திய மேலாதிக்க அமைப்புகளின் உலகமயம், மறுகாலனியாதிக்க நோக்கங்களுக்கு ஊழியம் செய்வன. அவற்றின் உலகமயம் – தனியார்மயம் – தாராளமயம் என்கிற புதிய பொருளதாரச் சீர்திருத்தக் கொள்கைகள் அமலாக்கப்படுவதுதான் ஜெயலலிதாவின் பேயாட்சி தொடுத்திருக்கும் தாக்குதல்களுக்குக் காரணம்.

இந்த உண்மையை சுயநல, பிழைப்புவாத அரசியலற்ற மக்களிடம் ''துணிந்து'' கூறி ஆதரவு திரட்டுகிறார் ஜெயலலிதா. சோனியா, வாஜ்பாய் – அத்வானி கும்பல்கூட அப்படித்தான் செய்கிறது. ''இனி சேவை – தொழில் பணிகளை அரசு மேற்கொள்ளத் தேவையில்லை என்று உலக வங்கி கூறுகிறது. அதைத்தான் நான் செய்கிறேன்'' என்கிறார் ஜெயலலிதா. இந்த உண்மையைப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கல்லூரி – பள்ளி ஆசிரியர்கள், அரசு ஊழியர்களிடம் எடுத்துவைத்து சரியான முழக்கங்களை முன்வைத்து வழிநடத்த மறுக்கிறது போராட்டத் தலைமை. இதெல்லாம் அவர்களுக்குப் புரியாது, அரசியல்படுத்துவதாகப் பயந்துவிடுவார்கள், போராட வரமாட்டார்கள் என்று காரணம் கூறுகிறது. அரசின் தாக்குதல்களுக்கு உண்மையான ஒரு பொதுக்காரணமும் அடிப்படையும் இருக்கையில், அதை எதிர்த்துப் போராடுபவர்கள் மட்டும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய முழக்கங்களை முன்வைக்கவும், போராடும் பல்வேறு சமூகப் பிரிவினரையும் ஒருங்கிணைத்துப் போராடவும் மறுப்பதன் இரகசியம் என்ன? உழைக்கும் மக்களையே தனித்தனிக் கூண்டுகளில் அடைத்து சுயநல நோக்கு என்கிற குறுகிய கண்ணோட்டத்தில் வளர்க்கும் தொழிற்சங்கப் பிழைப்புவாதம் மேலோங்கி நிற்கிறது. எனவேதான் ஜெயலலிதா, அத்வானி போன்ற பாசிஸ்டு களின் அரசியல் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாமல் நெருப்பிலிட்ட புழுவாக மடிந்து போகிறார்கள்.

www.padippakam.com

ஜெயேந்திரருக்கும்
சங்க பரிவாரத்திற்கும்
உள்ள உறவைப் போலவே
ஜெயலலிதாவிற்கும்
சங்க பரிவாரத்திற்கும்
உள்ள உறவும்
இயற்கையானது;
பாரதிய ஜனதாவுடன்
கருணாநிதி வைத்துள்ள
உறவைப் போல இது
சந்தர்ப்பவாதமானதல்ல.

**மதமாற்றத் தடைச்சட்டம்:**

## சுயமரியாதையுள்ள சூத்திரர்களே, தலித்துகளே...

# இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள்!

மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன, அதையும் இத்தனை அவசரமாகக் கொண்டு வருவதற்கான காரணம் என்ன - என்ற இந்தக் கேள்விகள் பலரால் பல விதமாக எழுப்பப்படுகின்றன.

தன்மீதுள்ள வழக்குகளிலிருந்து தப்பிக்க சங்க பரிவாரத்தின் தயவை நாடும் தந்திரம் என்றும், பா.ஜ.க.வுடனான கூட்டணிக்கு ஒரு முன்னோட்டம் என்றும் ஜெயலலிதாவின் இந்த நடவடிக்கைக்கு 'அரசியல்' நோக்கம் கற்பிக்கின்றன சில ஓட்டுக் கட்சிகளும் பத்திரிகைகளும். இது மிகத் தவறான மதிப்பீடு.

தாக்கரேயின் அகம்பாவம், வினய் கட்யாரின் ரவுடித்தனம், ஜோஷியின் போலி மேதாவித்தனம், சிங்காலின் மத வெறி, சங்கராச்சாரியின் சாதித்திமிர், அத்வானியின் நயவஞ்சகம், ரத்தத்தின் ரத்தங்கள் அளித்துள்ள சர்வாதிகாரம், கான்வென்ட் வர்க்கத்திற்கேயுரிய திமிர், எம்.ஜி.ஆரிடமிருந்து வாரிசுரிமையாகக் கிடைத்த பதவி - ஆகிய இவைய னைத்தும் பிசைந்து உருவான கலவைதான் ஜெயலலிதா.

இந்தச் சட்டத்தை 'அவசரமாக'க் கொண்டு வருவதற்கு இரு வேறு காரணங்கள் இருக்கலாம். விவசாயிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் என எல்லாத் தரப்பு மக்கள்மீதும் தாக்குதல் தொடுத்து வரும் இத்தருணத்தில் இதையும் 'கூட்டத்தோடு' சேர்த்து விடுவதன் மூலம் இப்பிரச்சினைக்குரிய முக்கியத்துவத்தைப் பறித்து விடுவது ஜெயலலிதாவின் நோக்கமாயிருக்கலாம்.

அல்லது கைரேகை விற்பன்னர்கள், கிளி ஜோசியர்கள், மலையாள மாந்திரீகர்கள் போன்ற அறிஞர் பெருமக்களின் ஆலோசனையின் பேரிலும் இந்த 'அவசரம்' காட்டப்பட்டிருக்கலாம்.



**ஜெ-ஆர்.எஸ்.எஸ்.: இயற்கையான உறவு!**

எனவே நம்முடைய கவனத்தை அவசரத்தின் மீது திருப்புவதைக் காட்டிலும் சட்டத்தின் மீது திருப்புவதே பொருத்தம். இப்படியொரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஜெயலலிதாவிற்கு 'வேறு' அரசியல் காரணங்கள் எதுவும் அவசியமில்லை. ஜெயேந்திரருக்கும் சங்க பரிவாரத்திற்கும் உள்ள உறவைப் போலவே ஜெயலலிதாவிற்கும் சங்க பரிவாரத்திற்கும் உள்ள உறவும் இயற்கையானது; பாரதிய ஜனதாவுடன் கருணாநிதி வைத்துள்ள உறவைப் போல இது சந்தர்ப்பவாதமானதல்ல.

1991-இல் ஆட்சியைப் பிடிப்பதற்காக ராஜீவின் பிணத்தைக் காட்டி ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தபோதே அம்மையாரின் இதயம் பார்ப்பன மதவெறிக் கும்பலிடம்தான் இருந்தது.

முதல்வர் நாற்காலியில் அமர்ந்த மறுகணமே கோயில்கள் புனரமைப்பு வேதாகமக் கல்லூரி அமைத்தல் என்றுதான் அவரது நடவடிக்கைகள் துவங்கின. பிறகு அயோத்தி கரசேவையை ஆதரித்தார்; பாபர் மசூதி இடிப்பையொட்டி பா.ஜ.க.வின் மாநில அரசுகள் கலைக்கப்பட்டதை எதிர்த்தார்; ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டவுடனே பார்ப்பன இந்து வெறியர்களுக்குத் தமிழ்நாட்டில் களம் அமைத்துக் கொடுத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

தற்போது ஆட்சிக்கு வந்தவுடனேயே மீண்டும் கோயில் புனரமைப்பு, அன்ன தானம், ஆன்மீக வகுப்பு, அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம், குஜராத் படுகொலைக்கு ஆதரவு எனத் தொடங்கி இந்துத்துவ அரசியலின் மிக முக்கியக் கோரிக்கையான மதமாற்றத் தடைச் சட்டத்தையும் இப்போது நிறைவேற்றியிருக்கிறார்.

சென்ற தேர்தலில் தங்கள் சந்தர்ப்பவாத அரசியல் கூட்டணியின் தேவைக்காக ஜெயலலிதாவிற்கு மதச்சார்பின்மை முகமூடி அணிவித்த மேக்கப் கலைஞர்களான (தமிழ் மாநில) காங்கிரசும் போலி கம்யூனிஸ்டுகளும்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். அப்படிப் பதில் சொல்வதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத்தான் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு முகத்தில் அதிர்ச்சியை வரவழைத்துக் கொள்கிறார்கள்; அல்லது ஜெயலலிதாவின் இந்த நடவடிக்கைக்கு 'வேறு' அரசியல் உள்நோக்கம் கற்பிக்க முயல்கிறார்கள்.

சென்னையில் சிறுபான்மை மதத்தினர் நடத்திய மாநாட்டில் பேசிய நல்லகண்ணு "அந்த அம்மாவைப் பதவியில் உட்கார வைத்த எங்களுக்கு இறக்கவும் தெரியும்" என்று முழங்கியிருக்கிறார். "பல்லக்குத் தூக்கியே பழகிய எங்களுக்கு இறக்கவும் தெரியும்" என்று எதார்த்தமாகப் பேசியிருக்கலாம்; இந்த வெட்கக் கேட்டுக்கு வீராவேசம் தேவையில்லை.

**எதிர்ப்பின் வலிமை என்ன?**

இவை ஒருபுறமிருக்க, இச்சட்டத்தின் முக்கியமான இலக்கான கிறித்தவ இசுலாமிய மதத்தினர் தமிழகமெங்கும் தங்களது எதிர்ப்பை உடனே வெளியிட்டுள்ளனர். பாரதிய ஜனதாவைத் தவிர மற்றெல்லாக் கட்சியினரும் அவர்களுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். குறிப்பாக, இச்சட்டம் தலித் மக்களின் கால்களில் பூட்டப்படும் விலங்கு என்ற அடிப்படையில் தலித் அமைப்புகள் தம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பரவலான எதிர்ப்பை இச்சட்டம் சந்திக்கின்ற காரணத்தினாலேயே, மதச்சார்பின்மைக்கும் ஜனநாயகத்திற்கும் எதிரான இந்தக் கருப்புச் சட்டத்தை, சரியான பொருளில் மக்கள் புரிந்து கொண்டுவிட்டனர் என்றோ, எதிர்க்கின்றனர் என்றோ நாம் கருதிவிடக் கூடாது.

சிறுபான்மையினர்க்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். பரப்பியுள்ள அவதூறுகள், இந்துமதம் குறித்தும் இந்திய மதச்சார்பின்மை குறித்தும் உருவாக்கப்பட்டுள்ள பிரமைகள், சாதி இந்துக்களிடம் நிலவும் தீண்டாமை வெறி ஆகியவற்றைக் கருத்துரீதியாக முறியடிப்பதும், இந்தக் கருப்புச் சட்டத்திற்கு எதிரான கருத்தை மக்களிடம் உருவாக்குவதும் வெவ்வேறு பணிகளல்ல. கடினமானதாக இருப்பினும் இதைத்தவிர வேறு குறுக்கு வழிகள் ஏதும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பசுமாட்டைத் தோலை உரித்துக் கொன்றார்கள் என்று குற்றம் சாட்டி அரியானாவில் தாழ்த்தப்பட்டவர்கள் 5 பேரை போலீசு நிலையத்தின் வாசலில் வைத்து, போலீசு அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் பட்டப் பகலில் கொலை செய்திருக்கிறார்கள் விசுவ இந்து பரிசத்தின் குண்டர்கள்.

மாட்டைக் கொன்ற குற்றத்திற்கு இறந்து போன 5 தலித்துகள் மீதும் வழக்குப் பதிவு செய்திருக்கிறது அரியானா அரசு. ஆனால் மனிதர்களைக் கொன்ற சாதிவெறியர்கள் யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

மாட்டைக் கொன்ற குற்றத்திற்கு இறந்து போன 5 தலித்துகள் மீதும் வழக்குப் பதிவு செய்திருக்கிறது அரியானா அரசு. ஆனால் மனிதர்களைக் கொன்ற சாதி வெறியர்கள் யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இந்த அநீதியைப் பற்றிக் கேட்டதற்கு, "இந்துக்களைப் பொருத்தவரை பசுவின் உயிர் மிகப் புனிதமானது" என்று தெனாவெட்டாகப் பதில் சொல்லியிருக்கிறான் விசுவ இந்து பரிசத்தின் தலைவனான கிரிராஜ் கிஷோர் என்ற கிழட்டுப் போக்கிரி. தலித்துகள் 5 பேரைக் கொன்றது நியாயம்தான் என்பதை இதைவிடத் திமிராக யாரும் சொல்ல முடியாது.

இந்த அநீதியையும் அவமானத்தையும் பொறுக்க முடியாமல் கொலை செய்யப்பட்ட தலித்துகளின் உறவினர்கள் பலர் புத்தமதத்திற்கு மாறியுள்ளனர். இச்சம்பவத்தையொட்டி அரியானாவிலேயே வேறு பல தலித் குடும்பங்கள் இசுலாமிய, கிறித்தவ மதங்களுக்கும் மாறியுள்ளனர். இவ்வாறு மதம் மாறியவர்கள் மிரட்டப்படுவதாகவும், உயிருக்குப் பயந்து அவர்கள் தலைமறைவாகி விட்டதாகவும் கூறுகிறார், அனைத்திந்திய எஸ்.சி, எஸ்.டி சங்கத்தலைவர் உதித்ராஜ்.

அரியானாவில் மதமாற்றத் தடைச் சட்டம் இன்னும் இயற்றப்படவில்லை. அவ்வாறு இயற்றப்பட்டிருந்தால் மதம் மாறிய தலித்துகள் மீதும், மதமாற்றச் சடங்கை நடத்திவைத்த பாதிரியார்கள், மவுல்விகள் மீதும், அந்நிகழ்ச்சியை வேடிக்கை பார்க்க வந்தவர்கள் மீதும் கூட அரசு வழக்கு தொடுக்கலாம்; அவர்களைக் கைது செய்யலாம்.

**இனி மதமாற்றம் என்பதே கிரிமினல் குற்றம்!**

ஏனென்றால் இச்சட்டத்தின்படி ஒவ்வொரு மதமாற்றமும் கொலை, கொள்ளையைப் போன்றதொரு கிரிமினல் குற்றம். அரசு அதனை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும். மதம் மாறி

இந்து மதவெறிக்கு உணவிடும் ஜெயா.




படிப்பகம்

www.padippakam.com

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் இன்னொரு பிரதிதான் மதமாற்றத் தடுப்புச் சட்டம்! பொடா சட்டத்தைப் போலவே இந்தச் சட்டமும் இந்து மதவெறி பாசிஸ்டுகளின் வரலாற்றுப் புரட்டுகள் மற்றும் பொய்ப் பிரச்சாரங்கள் என்ற அடித்தளத்தின் மீதுதான் ஒட்டி வைக்கப்பட்டிருக்கிறது.

யவரும், மாறுவதற்கு உதவியவரும் தாங்கள் நிரபராதிகள் என்று மாவட்ட ஆட்சியரிடம் நிரூபித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நிரூபித்துக் கொள்ளத் தவறினால் அவர்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

ஆம். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் இன்னொரு பிரதிதான் மத மாற்றத் தடுப்புச் சட்டம்! பொடா சட்டத்தைப் போலவே இந்தச் சட்டமும் இந்து மதவெறி பாசிஸ்டுகளின் வரலாற்றுப் புரட்டுகள் மற்றும் பொய்ப் பிரச்சாரங்கள் என்ற அடித்தளத்தின் மீதுதான் ஒட்டி வைக்கப்பட்டிருக்கிறது.

''1. பல்லாயிரம் ஆண்டுகளாக இந்துக்களாக இருந்து வரும் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களை இசுலாமியர்களும், கிறித்தவர்களும் மிரட்டியும் ஏமாற்றியும் மதமாற்றம் செய்து விட்டார்கள்.

2. மதம் மாறியவர்கள் யாரும் ஆன்மீகக் காரணங்களுக்காக மதம் மாறவில்லை. பொருளாதார ஆதாயங்களுக்காகவும், வாழ்வியல் சார்ந்த காரணங்களுக்காகவும்தான் மாறியிருக்கிறார்கள்.

3. எனவே அவ்வாறு மதம் மாறிய அனைவரையும் தாய் மதமான இந்து மதத்திற்குக் கொண்டு வரவேண்டும். இவ்வாறு கொண்டு வருவது மதமாற்றம் ஆகாது.

4. இந்த நாட்டின் மீது பற்றுடையவராக இருக்க வேண்டுமானால் இந்துவாக இருக்க வேண்டும். கிறித்தவர்கள், முசுலீம்களின் நாட்டுப்பற்று சந்தேகத்துக்குரியது.''

ஆர்.எஸ்.எஸ். கும்பல் முன்வைக்கும் மேற்கூறிய கருத்துகள்தான் இந்த மதமாற்றத் தடைச்சட்டத்திற்கு அடிப்படையாகும். இந்து மதம் என்றொரு மதமே கிடையாது என்பதும், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் எந்தக் காலத்திலும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததில்லை என்பதும் வரலாற்று உண்மைகள். இந்து மதம் என்றொரு மதத்தை சட்டரீதியாக உருவாக்கியவன் வெள்ளைக்காரன்தான் என்பது காஞ்சி சங்கராச்சாரியே ஒப்புக் கொண்ட உண்மை.

இவ்விசயங்கள் குறித்தும், ''இந்துக்கள்தான் தேசபக்தர்கள் - முசுலீம்களும் கிறித்தவர்களும் தேசவிரோதிகள்'' என்ற ஆர்.எஸ்.எஸ். அவதூறு குறித்தும் ஏற்கெனவே பலமுறை அம்பலப்படுத்தி எழுதியுள்ளோம். எனவே இச்சட்டம் குறித்த விசயங்களுடன் தற்போது நாம் வரம்பிட்டுக் கொள்வோம்.

**உச்சநீதி மன்றத்தின் காவித் தீர்ப்பு**

இந்த மதமாற்றத் தடைச் சட்டம் அரசியல் சட்டப்படி செல்லத்தக்கதே என்று நிறுவ ஜெயலலிதா அடிக்கடி மேற்கோள் காட்டும் உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் பார்ப்போம்.

''ஏமாற்றியோ, ஆசை காட்டியோ, கட்டாயப்படுத்தியோ மத மாற்றம் செய்வது தண்டனைக்குரிய குற்றம்'' என்று ஒரிஸ்ஸா, ம.பி. ஆகிய இரு மாநில காங்கிரசு அரசுகள் 70-களில் ஒரு சட்டமியற்றின. இந்தச் சட்டத்திற்கு எதிராக ஸ்தனிஸ்லாஸ் என்ற பாதிரியார் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். இச்சட்டம் அரசியல் சட்டத்தின் 25-ஆவது பிரிவு வழங்கும் 'மதஉரிமை' எனும் அடிப்படை உரிமையைப் பறிப்பதாகும் என்று வாதாடினார். ''மதப் பிரச்சாரம் செய்யும் உரிமை என்பது மதமாற்றம் செய்யும் உரிமை அல்ல'' என்று கூறிய உச்சநீதிமன்றம் 1977-இல் அவரது வழக்கைத் தள்ளுபடி செய்தது.

''சட்டப்பிரிவு 25(1) வழங்குகின்ற 'மனச்சாட்சிச் சுதந்திரம்' என்பது ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கப்பட்டுள்ளதேயன்றி ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்கு மட்டும் வழங்கப்படவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தனது மதத்தின் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்வது என்பதைக் கடந்து, அடுத்தவரை தன் மதத்திற்கு மாற்றுவது என்ற முயற்சியில் ஒருவர் ஈடுபடுவாரேயானால் அத்தகைய நடவடிக்கையானது மற்ற குடிமக்களின் மனச்சாட்சிச் சுதந்திரத்தில் தலையிடுவது ஆகும்.''

இந்தத் தீர்ப்பு அபத்தமானது என்பதும் ஒரு சார்பானது என்பதும் பார்த்தவுடனேயே விளங்கும். மதப்பிரச்சாரமோ, அரசியல் பிரச்சாரமோ எந்தப் பிரச்சாரமானாலும் அது கேட்பவரின் சிந்தனையிலோ செயலிலோ ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும் நோக்கத்துடன்தான் செய்யப்படுகிறது. மனிதர்களை நோக்கிச் செய்யப்படும் எல்லாப் பிரச்சாரங்களுக்கும் இது பொருந்தும்.

எனவே, எந்தவிதமான விளைவுகளையும் எதிர்பார்க்காமல் விளக்குக் கம்பத்தையும், சுவரையும் பார்த்துப் 'பிரச்சாரம்' செய்யும் பைத்தியங்கள் மட்டுமே இந்தச் சட்டத்தையும் உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் 'நேர்மையாக' அமல்படுத்த முடியும்.

இந்தச் சட்டம் நடைமுறையில் சிறுபான்மையினரின் மதப் பிரச்சார உரிமையைப் பறித்து விடுகிறது. பாதிரியார் ஒருவரின் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு ''ஐயா, நான் கிறித்தவனாக மதம் மாற விரும்புகிறேன்'' என்று யாரேனும் சொன்னால் பாதிரியார் என்ன பதில் சொல்வார்?

''ஐயா, நீங்கள் கிறித்தவராக மாறினால் உங்களுக்கு இறந்த பின் சொர்க்கம் உறுதி; எனக்கோ இப்போதே

**திண்டுக்கல் அருகே மூத்திரம் குடிக்க வைக்கப்பட்ட சங்கரன் (இடது), திண்ணியத்தில் மலம் விழுங்க வைக்கப்பட்ட முருகேசன், இராமசாமி. இதேபோல இராம. கோபாலன், சங்கராச்சாரி வாய்களில் கொட்ட முடியுமா?**





படிப்பகம்

www.padippakam.com

சிறைத் தண்டனை உறுதி. என்னுடைய நிலைமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு முடிவு செய்யுங்கள்'' என மன்றாடுவாரா?

மதப்பிரச்சாரம் செய்து கொள்ளுங்கள்; வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அது தூய ஆன்மீகப் பிரச்சாரமாக இருக்க வேண்டும். லவுகீக ஆசைகள் எதுவும் காட்டக் கூடாது!'' என்று எச்சரிக்கிறார் ஜெயலலிதா. நூற்றுக்கணக்கான செருப்புகளையும், ஆயிரக்கணக்கான புடவைகளையும் இன்னும் இவ்வுலக இன்பங்கள் என்னென்ன உண்டோ அத்தனையும் துய்த்துத் துவண்ட அம்மையார், 'ஆன்மீக' விசயத்தில் காட்டும் கண்டிப்பு நமக்குப் புரிகிறது.

**பால் பவுடர் - லவுகீகம், காமதேனு - ஆன்மீகம்!**

சோறு போட்டும், மருந்து கொடுத்தும் மதம் மாற்றுவது 'இவ்வுலக ஆசையைத் தூண்டுவது'; இந்த மதமாற்றங்கள் எல்லாம் 'ஆன்மீகச் செயல்கள்' அல்ல - சவுகரியத்திற்காகச் செய்யப்பட்ட லவுகீக (இவ்வுலகம் சார்ந்த) நடவடிக்கைகள்! இகலோக சவுகரியங்களுக்காக மதம் மாறுவது இழிவு, அவ்வாறு மதம் மாற்றுவது குற்றம் என்றால் பரலோக சவுகரியங்களுக்காக மதம் மாறுவதும், மாற்றுவதும் எப்படி?

பைபிளையோ, குர்ஆனையோ வேத புராணங்களையோ ஆதாரமாகக் கொண்டு ''எங்களது சொர்க்கத்தில் ஒயின், ஆட்டிறைச்சி, அப்சரஸ் ஸ்தீரிகள் போன்ற இன்னின்ன வசதிகள் உண்டு'' என்று ஆசை காட்டலாம். அந்த ஆசையில் மயங்கி இவ்வுலக சிற்றின்பங்களை மறந்து மேற்படி 'பேரின்பத்தில்' நாட்டம் கொள்பவர்களை மதம் மாற்றலாம்; அதை உச்சநீதிமன்றம் அனுமதிக்கிறது. ஜெயாவும் அனுமதிக்கிறார்.

புரியும்படி சொல்வதானால் காம தேனு என்று ஆசை காட்டலாம், ஆனால் பால்பவுடர் விநியோகிக்கக் கூடாது; கற்பக விருட்சம் என்று ஆசை காட்டலாம். ஆனால் கல்வி அளிக்கக் கூடாது; கைலாய பதவி உண்டு என்று உத்திரவாதம் தரலாம், ஆனால் சாகக் கிடக்கிறவனுக்கு வைத்தியம் செய்யக் கூடாது. இதுதான் சட்டத்திற்கான விளக்கம். கல்விக்கு சரஸ்வதி, காசுக்கு லட்சுமி, மூளைக் கோளாறுக்கு குணசீலம், அம்மைக்கு மாரியம்மா, இன்னும் வயிற்றுவலி - வாய்வுக் கோளாறுக்குத் தனித் தனி கடவுள்கள் என்று இவ்வுலக இன்ப - துன்பங்களை இலாகா வாரியாகப் பிரித்துத் தனித்தனிக் கடவுள்கள் வைத்திருக்கும்போது இகலோக ஆசையைத் தூண்டுவதில் என்ன குற்றம்?

கடவுள் வரை போவதற்குக் காலதாமதம் ஆகும் என்பதால், ''உடனடி நிவாரணம் - நீடித்த இன்பம்'' என்று பிரச்சாரம் செய்யும் சாய்பாபா, சிவசங்கர் பாபா போன்ற ஆக்ஷன் - 500, வயாக்ரா மாத்திரைகள் எல்லாம் வழங்குவது என்ன பேரின்பமா? ஜெபக் கூட்டங்கள் ஏமாற்று என்றால், மழை வருவதற்கும், வெயில் அடிப்பதற்கும் காஞ்சி 'முனிவர்' நடத்தும் வேள்விகள் எல்லாம் பத்தரை மாற்றா? ஆனானப்பட்ட அப்பர் பெருமானே அல்சருக்காக மதம் மாறியவர் தானே, நான் கான்சருக்காக மாறினால் என்ன என்று கூடக் கேட்கலாம். ஆனால் இதற்கெல்லாம் பதில் கிடையாது. அப்பருக்கு வந்தது 'ஆன்மீக அல்சர்' என்று விளக்கம் சொல்லி விடுவார்கள்.

> **"தங்கள் விருப்பத்துக்கு விரோதமாக மதம் மாற்றப்படுகிறார்கள்" என்று ஜெ. கூறுகிறாரே, இந்தச் சட்டம்தான் இசுலாமுக்கு மாற விரும்பும் மக்களை அவர்கள் விருப்பத்துக்கு விரோதமாக இந்து மதத்தில் கட்டிப் போடுகிறது.**

பால் பவுடர், பணம் காசு கிடக்கட்டும்; மீனாட்சிபுரத்தில் இசுலாமுக்கு மாறிய தாழ்த்தப்பட்ட மக்கள் பகிரங்கமாகச் சொல்கிறார்கள். ''சமமாக டீ குடிக்க வேண்டும், செருப்பணிந்து நடக்க வேண்டும், தோளிலே துண்டு போட வேண்டும், ஒரே கோயிலில் சாமி கும்பிட வேண்டும், சாதி வேறுபாடு இல்லாமல் எல்லோரும் எல்லோர் வீட்டிலும் அமர்ந்து சாப்பிட வேண்டும் - போன்ற இகலோக ஆசைகளுக்காகத்தான் இசுலாமுக்கு மாறினோம்'' என்று தெளிவாகச் சொல்கிறார்கள். மதம் மாறுவதற்கு முன் 'டேய்' என்று கூப்பிட்டவன் இப்போது 'பாய்' என்று கூப்பிடுகிறானென்று மகிழ்ச்சி அடைகிறார்கள்.

**மதம் மாறுவோர் கோழைகளாம்!**

ஆனால் இப்படி மதம் மாறியவர்கள் கோழைகளாம்; ஆன்மீக நோக்கங்களுக்காக அல்லாமல், கேவலம் சில சமூக உரிமைகளுக்காகத்தான் இவர்கள் மதம் மாறியிருக்கிறார்களாம் - சொல்கிறார் இல. கணேசன்.

சங்கராச்சாரியின் வாயில் மலத்தைத் திணித்தால் அதை மென்று விழுங்கி விட்டு பஜகோவிந்தம் பாடுவாரா? இராம. கோபாலனின் வாயில் மனித மூத்திரத்தை (மாட்டு மூத்திரமல்ல) பெய்தால், தாகம் தீர அதைப் பருகிவிட்டு 'பிபரே ராம ரஸம்' (பக்தா, ராமரசம் அருந்திப் பார்) என்று ராகமிழுப்பாரா?

அம்பேத்கர் கூறியது போல இந்து மதம் என்பது ஒரு மதமே அல்ல; அது



**தூத்துக்குடி மாவட்டம் சங்கரலிங்கபுரம் கிராமத்தில் போலீசால் சூறையாடப்பட்ட தலித் மக்களின் வீடுகள். இதே போல ஒரு அக்ரகாரம் - மேல்சாதித் தெருவில் நடக்குமா?**



படிப்பகம்

www.padippakam.com

ஒரு சட்டத் தொகுப்பு. சூத்திரர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் இந்து மதம் விதித்துள்ள 'ஆன்மீக நடவடிக்கை' என்பதே மேல் வருணத்தாரின் மனம் கோணாமல் அவர்களுக்கு அடிமைச் சேவகம் செய்வதும் அவர்களுடைய அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு அடிபணிந்து நடப்பதும்தான்.

''அவ்வாறு அடிபணிய முடியாது'' என்று தலித் மக்கள் செய்யும் கலகம்தான் அரியானாவின் மதமாற்றம். மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டு வருவதற்கு கூத்திரம்பாக்கம் மக்கள் இசுலாமுக்கு மாறுவதாகக் கூறியுள்ளதைக் காரணம் காட்டுவதன் மூலம் இந்த மதமாற்றத் தடைச் சட்டம், மனுதர்மப் பாதுகாப்புச் சட்டமே என்பது வெட்டவெளிச்சமாகி விட்டது.

''தங்கள் விருப்பத்துக்கு விரோதமாக மதம் மாற்றப்படுகிறார்கள்'' என்று ஜெ கூறுகிறாரே, இந்தச் சட்டம்தான் இசுலாமுக்கு மாற விரும்பும் மக்களை அவர்கள் விருப்பத்துக்கு விரோதமாக இந்து மதத்தில் கட்டிப் போடுகிறது.

**சட்டத்தின் 'ஆன்மீக' நோக்கம்!**

''அப்பாவி தலித் மக்கள் மதமாற்றம் செய்யப்படும் போது இந்துக்கள் இச்சட்டத்தின் துணையை நாட முடியும்'' என்கிறார் விசுவ இந்து பரிசத்தின் தமிழகத் துணைத் தலைவர் ஆர்.வி.பி.எஸ். மணியன் (கல்கி 20.10.2002)

அதாவது தலித்துகள் முசுலீமாக மதம் மாறி ''இனி நாங்கள் அடிமைத் தொழில் செய்ய மாட்டோம்'' என்று கூறினால் இந்தச் சட்டத்தின் துணை கொண்டு இந்துக்கள் அவர்களை 'நல்வழிப்படுத்த' முடியும். இதுதான் அவாளின் 'ஆன்மீக' நோக்கம்.

இந்த ஆன்மீகப் பித்தலாட்டம், தலித் மக்களின் உரிமையில் மட்டுமல்ல, ஒவ்வொரு தனிமனிதனின் உரிமையிலும் தலையிடுகிறது.

எந்த மதத்தையும் பின்பற்றுவதற்கோ, பின்பற்றாமல் இருப்பதற்கோ வழங்கப்பட்டுள்ள 'மனசாட்சி சுதந்திரம்' என்னும் சுதந்திரத்தின் அடிப்படையில்தான் ஒருவன் மதம் மாறுகிறான். அவன் பால்பவுடரைக் காட்டி மாற்றப்பட்டானா, பரம பிதாவைக் காட்டி மாற்றப்பட்டானா என்பதை ஆராய நீதிமன்றத்திற்கு ஏது உரிமை? மதம் மாறியவர்களின் மனச்சாட்சியை ஆராய்வது இருக்கட்டும்; கட்சி மாறிகளின் மனச்சாட்சியை நீதிமன்றம் ஆராயப் புகுந்ததுண்டா?

**பிறப்பால் மதத்தைத் தீர்மானிப்பது இறையியலா, உயிரியலா?**

இந்த நாட்டில் ஒவ்வொரு இந்துவும், முசுலீமும், கிறித்தவனும் சுயமாகச் சிந்தித்து ''இந்த வழிதான் எனது ஆன்ம விடுதலைக்கு உகந்தது'' என்று தெளிந்து, தனக்குரிய பரலோகத்தால் கவரப்பட்டு அந்தந்த மதத்தில் இருக்கிறானா, அல்லது 'நாய்க்குப் பிறந்தது நாய்க்குட்டி' என்பது போல இந்துவுக்குப் பிறந்ததால் இந்து, கிறித்தவனுக்குப் பிறந்ததால் கிறித்தவன் என்ற கணக்கிலா? நடைமுறையில் குடிமக்கள் பலரின் மதத்தைத் தீர்மானித்துக் கொண்டிருப்பது இறையியலா, அன்றி உயிரியலா?

பால் பவுடர் கொடுத்து மதம் மாற்றுபவன் குற்றவாளி என்றால், பாலூட்டி, சோறூட்டி வளர்த்த ஒரே காரணத்தினால் மதமில்லாமல் பிறந்த மனிதக் குழந்தையை இந்துவாகவும், முசுலீமாகவும் மதமாற்றம் செய்யும் பெற்றோர்கள் அனைவருமே தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள் என்று கொள்ளலாமா?

நேர்மறையில் மதம் என்று வரையறுக்க எதுவும் இல்லாததனால்தான் ''கிறித்தவ, முசுலீம், பார்சி, யூத மதத்தினர் தவிர ரோட்டில் போகிற வருகிற மனிதர்களும் மாடுகளும் அனைவரும் இந்துக்களே'' என்று ஒரு சட்டத்தால் மதத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

அல்லது வயது வந்தோர் வாக்குரிமை போல, வயது வந்த ஒவ்வொரு குடிமகனும் எல்லா மத நூல்களையும் கற்று, தன் மனச்சாட்சிப்படி ஒரு மதத்தைத் தெரிவு செய்து தழுவவோ, எதையும் தழுவாமல் இருக்கவோ முடியும் என்ற நடைமுறை அமலில் உள்ளதா? ஆள்பவனைத் தெரிவு செய்யவே 18 வயதாக வேண்டும் எனும் போது ஆண்டவனைத் தெரிவு செய்ய அதற்கும் மேல் வயதும் அனுபவமும் வேண்டாமா?

**யார் இந்து?**

இந்தக் கேள்விகள் எதற்கும் இந்து வெறியர்கள் பதில் சொல்ல முடியாது. ''இந்து என்றால் திருடன்'' என்று கருணாநிதி ஒரு இந்தி அகராதியிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசியதற்காகக் குதிக்கிறார்களே, ''யார் இந்து'' என்ற கேள்விக்கு மதரீதியாக இவர்களிடம் விடை இருக்கிறதா?

ஒரு மதம் என்றால் அதற்குப் பொதுவான புனிதநூல், பொதுவான கடவுள், அந்த மதத்தின் உறுப்பினர்களுக்குப் பொதுவான கடமைகள், உரிமைகள், சடங்குகள்.. எதுவும் கிடையாது. சாதிக்கு ஒரு உரிமை, ஒரு பழக்கம், ஒரு கடவுள்...! இதையே பன்முகத்தன்மையென்றும் ஜனநாயகமென்றும் திரிக்கிறார்கள் இந்தக் கயவர்கள்.

நேர்மறையில் மதம் என்று வரையறுக்க எதுவும் இல்லாததனால்தான் ''கிறித்தவ, முசுலீம், பார்சி, யூத மதத்தினர் தவிர ரோட்டில் போகிற வருகிற மனிதர்களும் மாடுகளும் அனைவரும் இந்துக்களே'' என்று ஒரு சட்டத்தால் மதத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

மதஉணர்வைச் சட்டத்தால் உருவாக்க முடியாதென்பதால், கிறித்தவ - முசுலீம் எதிர்ப்பு மதவெறியையே இந்துக்களின் மதஉணர்வாக மாற்ற முயல்கிறார்கள்.

**தீய சக்திகள் யார்?**

ஆர்.எஸ்.எஸ்.இன் மதவெறியும் தேசவெறியும் பிரிக்க முடியாதவை.

**தமிழ்நாடு சிறுபான்மையினர் கமிசன் தலைவர் அன்னம்மாள் ஃபிலிப் தடைச் சட்டத்தை நீக்குமாறு மனு கொடுக்கிறார். பேச்சுவார்த்தையின் பெயரால் மிரட்டும் ஜெயா.**





படிப்பகம்

www.padippakam.com

## தனிக்குவளை உங்கள் உரிமை!

அக்டோபர்-26 ஆம் தேதி ஸ்டார் டி.வியில் மதமாற்றத் தடைச்சட்டம் குறித்த விவாதத்தில் (Big Fight என்ற நிகழ்ச்சி) விசுவ இந்து பரிசத்தின் சார்பில் பங்கேற்ற பி.பி.சிங்கால் வழக்கமான தம் புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருந்தார். எதுவும் எடுபடவில்லை.

''கிறித்தவத்துக்கு மாறினால் தீண்டாமை போய்விடுமா? தலித் கிறித்தவர்கள் என்று சொல்வதே தீண்டாமையைத் தானே காட்டுகிறது! பல சர்ச்சுகளில் தலித்துகளுக்குத் தனி டம்ளர் இல்லையா?'' என்று இடிமுழக்கம் செய்தார். அதற்கு அடுத்து அவர் சொன்ன வரிதான் முக்கியம்.

''தனி டம்ளர் வைப்பது உங்கள் உரிமை. அதில் நான் தலையிட விரும்பவில்லை'' என்று 'ஜனநாயக பூர்வமாக' ஒதுங்கினார். ''தீண்டாமை என்பது எங்கள் உரிமை இதில் நீ தலையிடக்கூடாது'' என்பதுதான் இதன் பொருள்.

தேவாலயங்களுக்குத் தீ வைக்கும் விசுவ இந்து பரிசத், தீண்டாமையை அமல்படுத்த கிறித்தவர்களுக்கு உள்ள உரிமையில் மட்டும் எவ்வளவு ஜனநாயக பூர்வமாக நடந்து கொள்கிறது!

ஜெயலலிதா அதை வழிமொழிகிறார். ''தேசவிரோத சக்திகளிடமிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பணம் வாங்கும் தீய சக்திகள் நமது சமூகக் கட்டுமானத்தைச் சீர்குலைக்கின்றன'' என்கிறார்.

''உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற தேசவிரோத சக்திகளிடம் பணம் வாங்கிக் கொண்டு, விவசாயத்துக்கு மின்சார வெட்டு, பொதுத்துறை தனியார்மயம், அரசுக் கல்லூரி தனியார்மயம், ஆரம்பப்பள்ளி மூடல், அரசு ஊழியர் ஆட்குறைப்பு போன்ற நடவடிக்கைகள் மூலம் சமூகக் கட்டுமானத்தையே சீர்குலைக்கும் சக்தி யார்?'' என்று மக்களிடம் கேட்டால் ஜெயலலிதா என்று உடனே பதில் வரும்.

''அமெரிக்க ஹிந்துக்களிடமிருந்து காசு வாங்கி குஜராத்தைச் சீர்குலைத்த தீய சக்தி யார்?'' என்று கேட்டால் ''விசுவ இந்து பரிசத்'' என்று உலகமே சொல்லும்.

ஆனால் ஜெ. குறிப்பிடும் தீய சக்தி வேறு. அவருக்கு சர்ச் பார்க் கான்வென்டில் ஆங்கிலம் கற்றுத் தந்த தீயசக்திகளை அவர் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். உலக கிறித்தவக் கவுன்சிலின் வழிகாட்டுதலில்தான் இந்தியாவில் மதமாற்றங்கள் நடப்பதாகவும் ''மதமாற்றம் என்பதே தேசிய மாற்றம்தான்'' என்றும் கூறி நம்மை எச்சரிக்கிறார்.

ஆம். மதம் மாறுகிறார்கள். அதன் விளைவாக ஏதோ சிறிய அளவிலாவது சாதியக் கட்டுமானம் (ஜெ.யின் மொழியில் சமூகக் கட்டுமானம்) சீர்குலைந்திருக்கிறது. ஆனால் தேசத்தை மாற்றிக் கொண்டவர்கள் யார்? கூத்திரம்பாக்கத்து தலித்துகள் முசுலீமாக மாறி சவுதியில் குடியேறப் போகிறார்களா? அல்லது ஷேக்குகள்தான் அவர்களுக்குக் குடியுரிமை வழங்கப் போகிறார்களா?

குஜராத்திலும், ஒரிசாவிலும் மதம் மாறிய பழங்குடிகள் அதே காட்டில்தான் சுள்ளி ஒடித்துக் கொண்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறித்தவராக மதம் மாறிய மீனவர்கள் விசைப்படகிலேறி அப்படியே அமெரிக்காவுக்கு ஓடிவிடவில்லை. ஆர்.எஸ்.எஸ்.ஸிடம் வெட்டுப்படுவதற்காக மண்டைக் காட்டுக்குத்தான் திரும்பி வருகிறார்கள். இவர்களெல்லாம் மதம் மாறியும் தேசத்தை மாற்றிக் கொள்ளாத 'தேசத் துரோகிகள்'.

பாரத மாதாவின் மடியிலிருந்து தப்பி ஓடும் ''வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்''களில் இந்துக்கள் எத்தனை பேர், கிறித்தவர்கள் எத்தனை பேர் என்று ஆர்.எஸ்.எஸ். கணக்கெடுக்குமா? இராமனும், கிருஷ்ணனும், ரிஷிகளும், முனிவர்களும் அவதரித்த இந்தப் புண்ணிய பூமியை விட்டு ஓடுகிறார்களே, அவர்களை ஆசை காட்டி இழுப்பது யார்? அமெரிக்கப் பாதிரியார்களா? அவர்கள் பால்பவுடருக்கு மதம் மாறும் புளியந்தோப்பு, வியாசர்பாடி இந்துக்களல்ல; டாலருக்காக தேசம் மாறும் மைலாப்பூர், மாம்பலம் இந்துக்கள். கட்டாய மத

> **''அமெரிக்க ஹிந்துக்களிடமிருந்து காசு வாங்கி குஜராத்தைச் சீர்குலைத்த தீய சக்தி யார்?'' என்று கேட்டால் ''விசுவ இந்து பரிசத்'' என்று உலகமே சொல்லும்.**

''இந்துக்களைப் பொறுத்தவரை பசுவின் உயிர் மிகப் புனிதமானது'' - அரியானாவில் தலித்துகள் 5 பேர் கொல்லப்பட்டதை நியாயப்படுத்தும் கிழட்டு நாய் கிரிராஜ் கிஷோர் (வலது) அசோக் சிங்காலுடன்.






படிப்பகம்

www.padippakam.com

மாற்றம் போல இவர்கள் கட்டாயமாக தேசிய மாற்றத்துக்கு ஆளாகிறார்களோ? இல்லை. அன்றும் இல்லை, இன்றும் இல்லை.

**சட்டத்தினால் ஒரு கொட்டடி!**

அவர்கள் வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்கள், கிறித்தவர்களும், முசுலீம்களும் இந்நாட்டில் குடியேறிய அந்நியர்கள்! தேசத்தையே மாற்றிக் கொண்டாலும் அவர்களுக்கு இந்தியக் குடியுரிமையும், இந்தியக் குடிமக்களை விட மேலதிக உரிமைகளையும் பாரதிய ஜனதா வழங்கும். ஆனால் சாதிக் கொடுமையிலிருந்து தப்பிக்க கிறித்தவத்திற்கோ, இசுலாமிற்கோ மதம் மாறினால் தாழ்த்தப்பட்டவர்களின் இடஒதுக்கீட்டு உரிமையை ரத்து செய்யக் கோரும்.

இதுதான் கட்டாயம். இதுதான் மிரட்டல். ஏனென்றால் ஆசை காட்டிக் கவர்ந்திழுப்பதற்கு இந்துமதத்தில் எதுவும் இல்லை. கிறித்தவத்திற்கும் இசுலாத்திற்கும் மாறிய சூத்திர பஞ்சம சாதியினருக்குச் சேவை செய்து அவர்களை மீண்டும் இந்து மதத்திற்குக் கவர்ந்திழுக்க முடியாது. ஏனென்றால் இவாளுக்குச் சேவை செய்வதற்காகவே அவர்களை நியமித்திருக்கிறது இந்துமதம். மத மாற்றம், 'சகோதரன் பிரிந்து விட்டானே' என்ற துயரத்தை இந்து மதவெறியர்களுக்குத் தோற்றுவிக்கவில்லை. 'வேலைக்காரன் ஓடிவிட்டானே' என்ற ஆத்திரத்தைத்தான் உண்டாக்குகிறது.

அதனால்தான் அரியானாவில் மதம் மாறியவர்களுக்குக் கொலை மிரட்டல் விடுகிறார்கள். மிரட்டலுக்கு அஞ்சாமல் மதம் மாறத் துணிகிறார்கள் தலித்துகள். கூத்திரம்பாக்கத்தில் ''இசுலாமுக்கு மதம் மாறும் விழா'' என்று சுவரொட்டி அடித்து விளம்பரம் செய்திருக்கிறார்கள். ஆனால் மவுல்வியை ஊருக்கு வெளியிலேயே மடக்கி விட்டது போலீசு.

''என்னுடைய அடிமை தப்பித்து உன்னிடம் வந்தால் நீ அவனுக்கு அடைக்கலம் தரக்கூடாது. கொடுத்தால் உனக்கும் தண்டனை!'' என்று மிரட்டுகிறது இந்தச் சட்டம்.

இதுதான் எல்லை. திண்ணியத்தில் சாதிவெறியர்களால் தலித்துகளின் வாயில் திணிக்கப்பட்ட மலமும், அரசால் திணிக்கப்படும் இந்து மதமும் ஒன்றுதான். சுயமரியாதையுணர்வு கொண்ட சூத்திரர்களே, தலித்துகளே இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள்!

● சூரியன்

## மதமாற்றத் தடைச்சட்டம்:

# அல்லி ராணிக்கு ஆதரவாக ஊத்தைவாயன் ஓலம்!

மதமாற்றத் தடைச்சட்டத்தை எதிர்த்து சிறுபான்மையினர் கூட்டம் நடத்தியவுடனே அதற்குப் போட்டியாக ''தடைச்சட்ட ஆதரவு'' பொதுக்கூட்டம் நடத்தினார் சங்கராச்சாரி. காஞ்சி மடம் நடத்தும் கூட்டம் என்றால் ''பிராமணர் சங்கக் கூட்டம்'' என்று கருதி பெரும்பான்மை ஹிந்துக்கள் கண்டு கொள்ளாமலிருந்து விடுவார்கள் என்பதால் சுமார் 12 சாதி சங்கங்களின் பெயரில் முதல் நாளே பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்து விட்டார் ஜெகத்குரு.

கிறித்தவப் பள்ளிகளுக்கு 24ஆம் தேதி லீவு விட்டது குற்றம் என்று சொன்ன இந்த யோக்கியர்கள் மார்வாரி, இந்துப் பள்ளி மாணவர்களைக் கடற்கரைக்கு ஓட்டி வந்திருந்தனர். காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டங்களிலிருந்தும் சென்னை சேரிகளிலிருந்தும் தாழ்த்தப்பட்ட பெண்களை லாரியில் கொண்டு வந்து இறக்கியிருந்தனர்.

எழுச்சி பெற்ற ஹிந்துக்கள் அணி அணியாக வந்தனர் என்று காட்டுவதற்காக லாரியை கண்ணகி சிலையருகிலேயே நிறுத்தி அங்கிருந்து லைட் ஹவுஸ் வரை நடுங்கும் கடல் காற்றில், மழையில் அவர்களை நடக்கவிட்டனர். ஆர்.எஸ்.எஸ் இந்துக்கள் நாற்காலியில் அமர்ந்திருக்க, லாரியில் வந்த இந்துக்கள் மழைச்சாறலில் நடுங்கிக் கொண்டிருந்தனர். மிக அதிகபட்சமாகக் கணக்கு வைத்தாலும் கூட்டம் 4000 பேர்தான். கடற்கரைக்கு அருகிலேயே இருந்த மைலாப்பூர், திருவல்லிக்கேணி பார்ப்பனர்கள் யாரும் அந்தப் பக்கமே வரவில்லை.

''ஜெகத்குரு வந்து கொண்டிருக்கிறார். நான் ''ஜெய ஜெய சங்கர'' என்று சொன்னவுடன் நீங்கள் ''ஹர ஹர சங்கர'' என்று சொல்ல வேண்டும்'' என்று மைக்கில் அறிவித்துவிட்டு ''ஜெய ஜெய சங்கர'' என்றார் ஒரு தொண்டர். கூட்டத்தில் மயான அமைதி. வேறு வழியின்றி மேடையில் இருந்தவர்களே ''ஹர ஹர சங்கர'' என்று கத்திக் கொண்டார்கள்.

மேடையில் சங்கராச்சாரியின் காலடியில் இரண்டு ஹிந்து பிரமுகர்கள் சட்டையில்லாமல் அமர்ந்திருந்தனர். ஒருவர் நடிகர் எஸ்.வி.சேகர். ஏற்கனவே காவிரிப் பிரச்சினைக்காக நடந்த நடிகர் சங்கக் கூட்டத்தில் இவர் ரஜினிக்கு அருகில் கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தார். இன்னொருவர் இந்தியன் வங்கி கோபாலகிருஷ்ணன். சினிமா நடிகைகளுக்கும், ஒட்டுப் பொறுக்கி கிரிமினல்களுக்கும் 1200 கோடி ரூபாய் வங்கிப் பணத்தை வாரி வழங்கிய உத்தம ஹிந்து.

''நான் சொல்லி இந்தச் சட்டம் கொண்டு வரவில்லை; தலித் மக்கள் கட்டாய மதமாற்றம் பற்றி புகார் செய்ததால் தான் சட்டம் வந்தது'' என்ற பச்சைப் பொய்யுடன் பேசத் தொடங்கினார் ஜெயேந்திரர். மதமாற்றம் பற்றி தினமும் புகார் செய்து வரும் தலித்தான ராம. கோபாலன் முன்வரிசையில் உட்கார்ந்திருந்தார்.

''கல்யாணத்தை ரிஜிஸ்தர் ஆபீசில் பதிவு செய்வது போல மதமாற்றத்தையும் பதிவு செய்யச் சொல்கிறோம். இதிலென்ன தவறு?'' என்று கேட்டார். ''கல்யாணத்தைப் பதிவு செய்யாவிட்டால் சிறைத் தண்டனை கிடையாது'' என்ற உண்மையைத் தொண்டைக்குள் நிறுத்திக் கொண்டார். அப்புறம் இந்து ஒற்றுமை, தீண்டாமை கிடையாது, தீபாவளியின் பெருமை பற்றியெல்லாம் ஜெயந்திரர் பேசப்பேச கூட்டம் பொறுமையிழந்து கொண்டிருந்தது.

''கூட்டத்துக்கு வந்தவர்களுக்கெல்லாம் வேட்டி, சேலை, லட்டு தருகிறோம், இது ஆசை காட்டுதல் (Allurement) அல்ல; தீபாவளிப் பரிசு'' என்றார். லஞ்சத்துக்குப் பெயர் கூட அன்பளிப்பு தானே! வயது முதிர்ந்த பெண்களெல்லாம் குளிரில் நடுங்கியபடி எதற்காகக் காத்திருந்தார்கள் என்ற உண்மை புரிந்தது. அடுத்த மதத்துக்காரனை ஆசைகாட்டி இழுப்பது கிடக்கட்டும், சொந்த மதத்துக் காரர்களுக்கே ஆசைகாட்ட வேண்டிய வெட்கக்கேட்டை எங்கே சொல்வது?

அந்த வெட்கக்கேட்டை 'டமால்' என்று போட்டு உடைத்தார் ஜீனியர் சங்கராச்சாரி. ''காஞ்சி மடம் 2000 ஆண்டுகளா இருக்கு; இப்போ ஒரு 50,60 வருசமா குடிசைப் பகுதிகளுக்குப் போய்கிட்டிருக்கிறோம்'' என்றார். மீதி 1940 வருசங்களாக எங்கே போய்க் கொண்டிருந்தார்கள் என்று சொல்லவில்லை.

கூட்டத்துக்கு வந்த இந்துக்கள் வேட்டி, சேலை, லட்டுவைத் தேடிப் போய்க்கொண்டிருந்தார்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

## மதமாற்றத் தடைச்சட்டம்:

# மாவட்ட ஆட்சியர்கள், இந்து மதத்தின் ஏஜெண்டுகள்!

"கட்டாயப்படுத்தியோ, ஆசை காட்டியோ மோசடியான வழிமுறைகளைக் கையாண்டோ, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த ஒரு நபரும் இன்னொருவரை மதம் மாற்றக் கூடாது; அத்தகைய முயற்சியில் ஈடுபடவும் கூடாது; அல்லது அத்தகைய மதமாற்றத்தைத் தூண்டவும் கூடாது.

இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனையும், 50,000 ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படலாம். மதமாற்றம் செய்யப்படுபவர்கள் இளம் பிராயத்தினராகவோ, பெண்களாகவோ, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினராகவோ இருப்பின் சிறைத்தண்டனை 4 ஆண்டுகள், அபராதம் ஒரு லட்ச ரூபாய்.

ஒருவர் தானாக விரும்பி மதம் மாறினாலும், அல்லது மத மாற்றச் சடங்கில் மதகுருவாகப் பங்கேற்றாலும், அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ அத்தகைய நிகழ்ச்சியில் யாரொருவர் கலந்து கொண்டாலும் அவர்கள் அனைவருமே குறிப்பிட்ட காலத்திற்குள் அது பற்றி மாவட்ட ஆட்சித்தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறு தெரிவிக்கத் தவறினால் ஒரு ஆண்டு சிறைத் தண்டனையும் 1000 ரூபாய் அபராதமும் விதிக்கப் படும்.

பணம், பொருள் அல்லது வேறு எந்த வகையான ஆதாயத்தையும் வழங்குவது 'ஆசை காட்டுதல்' ஆகும் என்று இச்சட்டம் வரையறுக்கிறது.

இறைவனின் கோபத்தையும் சாபத்தையும் சந்திக்க நேரும் என்றோ, அல்லது வேறு எந்த வகையிலோ அச்சுறுத்துவதும் சமூகப் புறக்கணிப்பு செய்துவிடுவதாக அச்சுறுத்துவதும் "கட்டாயப் படுத்துதல்" என்று பொருள் கொள்ளப் படுமென இச்சட்டம் கூறுகிறது.

"மோசடியான வழிமுறைகள்" என்ற சொற்றொடரின் பொருள் என்ன என்பதை இச்சட்டம் விளக்கவில்லை. "எது மோசடி என்பதை ஒவ்வொரு குறிப்பிட்ட வழக்கிலும் நீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும்" என்று ஜெ. கூறியிருக்கிறார். எதை வேண்டுமானாலும் 'மோசடி' என்று அரசு குற்றம் சாட்டலாமென்பதால் சட்டத்தின் இந்தப் பிரிவுதான் மோசடிகளின் தாய்!

இத்தகைய மதமாற்றங்கள் குறித்துப் பல புகார்கள் அரசுக்கு வந்திருப்பதாகவும், ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்களை சமூக விரோத சுயநலவாத சக்திகள் ஏமாற்றிப் பயன்படுத்திக் கொள்வதை இச்சட்டம் தடுக்கும் என்றும், மதம் என்ற போர்வையில் மதப்பூசலை உருவாக்குகின்ற மத அடிப்படைவாத சீர்குலைவு சக்திகளின் முயற்சிகளை முளையிலேயே கிள்ளுவதற்கு இச்சட்டம் பயன்படுமென்றும், இச்சட்டத்தின் அவசியம் குறித்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

இச்சட்டத்தை நியாயப்படுத்தி அக்.10ஆம் தேதி ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் கீழ்க்கண்ட விசயங்கள் குறிப்பிடத்தக்கவை.

பலர் தங்களது சொந்த விருப்பத்துக்கு விரோதமாக மதம் மாறுவதற்குக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

தேசவிரோத சக்திகளிடமிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பணம் வாங்கும் தீயசக்திகள் நமது சமூகக் கட்டுமானத்தைச் சீர்குலைக்கின்றனர்.

இத்தகைய மதமாற்றங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவிக்க வேண்டுமெனச் சட்டமியற்றினோம்.

இதுதான் சட்டம். இனி இச்சட்டத்தின் இரட்டை நாக்கையும், இது நடைமுறைப்படுத்தப்பட்டால் நடக்கவிருக்கும் விபரீத விளைவுகளையும் பார்ப்போம்.

"ஆசை காட்டுதல், அச்சுறுத்துதல், மோசடியான வழிமுறைகளைக் கையாளுதல்" ஆகிய மூன்றையும் தடை செய்தால், எல்லா மதங்களையுமே தடை செய்ய வேண்டி வரும். இந்த உலகத்தில் ஆளும் வர்க்கத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்காகப் பரலோகம் குறித்து ஈஸ்ட்மென் கலரில் ஆசை காட்டாத மதமில்லை; மதக் கோட்பாடுகளை மீறினால் உடனடியாகவோ, நரகத்திலோ தண்டனை விதிக்காத மதமில்லை; எல்லா மதநிறுவனங்களுக்கும் மோசடியே மூலதனம். இந்த 3 குற்றங்களிலும் முன்னிலை வகிப்பது இந்துமதம்.

இச்சட்டத்தின்படி மேற்படி தவறான வழி முறைகளைக் கையாண்டு புதிதாக யாரையும் மதமாற்றம் செய்யக்கூடாது. ஆனால் பழைய ஆட்களை மேற்படி வழிமுறைகள் மூலம் தொடர்ந்து ஏமாற்றலாம், அது மத உரிமை.

"மதம் மாற்றும் முயற்சியில் மறை முகமாக ஈடுபடக் கூடாது" என்ற வரிகள் ஆர்.எஸ்.எஸ் காரர்கள் மொட்டைக் கடிதாசி போடுவதற்கும், பொய்ப்புகார் தருவதற்குமென்றே சேர்க்கப்பட்டுள்ளன.

ஒரு சிறுபான்மைக் கல்வி நிறுவனத்தில் நியாயமான தவறுக்குத் தண்டிக்கப்பட்டாலோ, தனது கோரிக்கை நிறைவேறவில்லை என்றாலோ "மறைமுக நிர்ப்பந்தம்" என்ற இந்த அஸ்திரத்தை எந்தவொரு இந்து மாணவன் மற்றும் ஊழியரும் ஏவலாம். எந்த ஒரு சேவை நடவடிக்கையும் விசாரணைக்கு உள்ளாகலாம். இந்து மதத்தின் மீது பகுத்தறிவாளர்கள் தொடுக்கும் விமரிசனங்களும் "மதமாற்றத்தை மறைமுகமாகத் தூண்டுபவை" எனக் குற்றம் சாட்டப்படலாம்.

"எல்லா மதமாற்றங்களும் மாவட்ட ஆட்சியரிடம் பதிவு செய்யப்பட வேண்டும்" என்ற விதி, ஒவ்வொரு மதமாற்றத்தையும் பரிசீலிக்கும் அதிகாரத்தையும், தடுக்கும் கடமையையும் ஆட்சியர் மேல் சுமத்துகிறது. ஆட்சியர் என்பவர் இனி இந்து மதத்தின் ஏஜெண்டு.


**புதிய வெளியீடுகள்**

- தமிழ் மக்கள் இசை விழா ஒன்பதாம் ஆண்டு - (2002)
  ஒரு மணிநேர ஒளிக் குறுந்தகடு (கருத்தரங்கம்-கலை நிகழ்ச்சிகள்)
  மினி டி.வி. ஃபார்மெட்டில் (MINI D.V.) ஒளிப்பதிவு செய்யப்பட்டது.
  விலை: ரூ. 100/-
- 2002 மே தினப் போராட்டம் - ஈரோடு, நெய்வேலியில் நடந்த ஊர்வலம், பொதுக் கூட்டம், ஆர்ப்பாட்டம், அந்நியத் துணி எரிப்பு - ஆகியவற்றின் ஒருமணிநேர ஒளிக்குறுந்தகடு.
  வி.ஹெச்.எஸ்.இல் ஒளிப்பதிவு செய்யப்பட்டது.
  விலை: ரூ. 100/-

தபால் செலவு ரூ. 20/-

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

புதிய கலாச்சாரம், 18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, 15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை - 600 083. ✆: 3718706




படிப்பகம்

www.padippakam.com

# மதமாற்றத் தடைச்சட்டம்:

# காதலர்களிடம் கலெக்டர் விசாரணை!

*முன்னாள் சினிமா நடிகையும் இந்நாள் முதல்வருமான ஜெயலலிதா கொண்டு வந்துள்ள மதமாற்றத் தடைச் சட்டத்தைப் புரிந்து கொள்ள நாம் சினிமாக்காரர்களின் உத்தியையே கையாள்வோம்.*

*கதை இப்படித் தொடங்குகிறது. ஒரு இந்துப் பெண்ணும் முசுலீம் இளைஞனும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள். இந்தக் கதையானது த.மு.வில் (அதாவது தடைச்சட்டத்துக்கு முன்) நடந்திருந்தால் இருவரும் ஏதாவது ஒரு பதிவாளர் அலுவலகத்தில் போய், சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் தங்கள் திருமணத்தைப் பதிவு செய்து கொண்டிருப்பார்கள்.*

*ஒரு வேளை காதலனின் மதத்திற்குக் காதலியோ, அல்லது காதலியின் மதத்திற்குக் காதலனோ மாறிவிடுவது என்று அவர்கள் முடிவு செய்திருந்தால், அத்தகைய மதமாற்றச் சடங்கிற்குப் பின் இந்து அல்லது இசுலாமிய முறைப்படி அவர்களது திருமணம் நடந்திருக்கும்.*

*பெற்றோர்களும் உறவினர்களும் இத்திருமணத்தை எதிர்த்து அரிவாளுடன் விரட்டும் பட்சத்தில், ஏதாவதொரு நேர்மையான காவல் நிலையத்தின் லஞ்சம் வாங்காத போலிசு அதிகாரியைத் தேடிக்கண்டுபிடித்து சரணடைந்திருப்பார்கள். ''வயது வந்த ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வதை மதத்தின் பேரால் தடுப்பது சட்டவிரோதம்'' என்று எடுத்துச் சொல்லி அந்தப் போலீசு அதிகாரி பெற்றோர்களைப் பத்தி விட்டிருப்பார்.*

*இவையெல்லாம் த.மு.வில் (அதாவது தடைச்சட்டத்திற்கு முந்தைய காலத்தில்) நடந்திருக்கக் கூடியவை. இப்போது நாம் த.பி யில் (தடைச்சட்டத்திற்குப் பிந்தைய காலத்தில்) வாழ்கிறோம்.*

*மதம் மாறிக் காதலிக்கும் மேற்படி ஆணும் பெண்ணும், காதலர்களாக இருக்கின்ற அதே நேரத்தில் இந்தப் புதிய சட்டத்தின்படி கிரிமினல் குற்றவாளிகளாகவும் இருக்கிறார்கள். சரியாகச் சொன்னால், ஒரு கிரிமினல் குற்றத்தை இழைக்கக் கூடிய விளிம்பில் அவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்.*

*இந்தக் குற்றத்திலிருந்தும் சிறைத் தண்டனையிலிருந்தும் அவர்களைத் தடுத்தாட்கொள்ளும் அதிகாரத்தையும், ஆற்றலையும், ஆன்மீக உள்ளொளியையும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் 29 பேருக்கு மட்டுமே விநியோகித்திருக்கிறார் முதலமைச்சர்.*

*எனவே, அவர்கள் மாவட்ட ஆட்சியரின் சந்நிதியில் சரணடைய வேண்டும். அங்கே விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் ஒரு விண்ணப்பப் படிவத்தைக் காதலர்கள் இருவரும் நிரப்ப வேண்டும். (படிவம் இன்னும் விற்பனைக்கு வராததால் அதன் விலை தெரியவில்லை. உலகவங்கி அனுமதிக்கும் பட்சத்தில், புரட்சித்தலைவி அவர்கள் மேற்படி விண்ணப்பப் படிவங்களை தாயுள்ளத்துடன் இலவசமாகவே விநியோகிக்கவும் வாய்ப்புண்டு)*

*படிவத்தில் என்ன கேள்விகள் இருக்கும் என்பதையும் தற்போது வாசகர்களுக்கு நாம் கூறவியலாது. மதமாற்றத்தை உடனே நிறுத்த வேண்டும் என்ற அவசரத்தில் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டதால் படிவம் இன்னும் தயாராக வில்லை. சங்கராச்சாரி, இராம கோபாலன் போன்ற 'எழுச்சியுற்ற ஹிந்துக்கள்' படிவத்தைத் தயாரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால் விரைவிலேயே விண்ணப்பம் தயாராகி விடும் என நம்பலாம்.*

*நாம் கதைக்கு வருவோம். மேற்படி காதலர்கள் மாவட்ட ஆட்சியர் முன் ஆஜராக வேண்டும். ஆஜராகிறார்கள்.*

●●●



**ஆட்சியர்:** பயப்பட வேண்டாம். மத மாற்றத் தடைச்சட்டம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

**காதலர்கள்:** தெரியாது.

**ஆட்சியர்:** இதுகூடத் தெரியாமல் எப்படிக் காதலிக்கிறீர்கள்?

**காதலர்கள்:** மவுனம்.

**ஆட்சியர்:** பொதுவாகக் காதல் விவகாரங்களில் அரசாங்கம் தலையிடுவதில்லை. ஆனால் காதல் என்ற பெயரில் ஒரு தேச விரோத சதி நடப்பதை நாங்கள் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. எனவே இது உண்மையான காதல்தானா அல்லது மதம் மாற்றும் சதியா என்று நான் தெரிந்து கொள்ள வேண்டும்.

**கட்டாயப்படுத்தியோ, ஆசை காட்டியோ, மோசடி செய்தோ** மத மாற்றம் செய்வது குற்றம் — என்று நம் சட்டம் சொல்கிறது.

நீ சொல்லம்மா, இந்தப் பையனை நீ உண்மையிலேயே காதலிக்கிறாயா அல்லது அவன் உன்னைக் கட்டாயப் படுத்தினானா?

**பெண்:** நானாக விரும்பித்தான் காதலிக்கிறேன்.

**ஆட்சியர்:** அப்படியா, மகிழ்ச்சி. யார் முதலில் காதலைச் சொன்னீர்கள்?

**பெண்:** (வெட்கத்துடன்) அவர்தான் சொன்னார்.

**ஆட்சியர்:** அப்படியானால் அவன் உனக்கு ஆசை காட்டியிருக்கிறான். அப்படித்தானே!

**பெண்:** இல்லை. எனக்கும் அவரைத் திருமணம் செய்து கொள்ள ஆசைதான்.

**ஆட்சியர்:** அவன் ஆசை காட்டாமலிருந்தால் நீ எப்படி ஆசைப்பட்டிருக்க முடியும்?

**பெண்:** எனக்கும் ஆசை இல்லாமலிருந்தால் நான் எப்படிச் சம்மதித்திருக்க முடியும்?

**ஆட்சியர்:** சரி. எதைப் பார்த்து அவனிடம் ஆசைப்பட்டாய்?

**பெண்:** என்ன சார் இப்படி அசிங்கமாகக் கேள்வி கேட்கிறீர்கள்?

**ஆட்சியர்:** தப்பா எடுத்துக்காதேம்மா, ''வசதியாய் வாழலாம்; துபாய்



படிப்பகம்

www.padippakam.com

போகலாம், சிங்கப்பூர் போகலாம்" என்று இவன் ஆசை காட்டினானா?

**பெண்:** இல்லை.

**ஆட்சியர்:** ஒருவேளை அவன் அந்தஸ்தைப் பார்த்து மயங்கி விட்டாயா?

**பெண்:** இல்லை, அவர் அப்பா பெட்டிக் கடை வச்சிருக்கார், எங்கப்பா வங்கி அதிகாரி. அவர்களைவிட நாங்கள்தான் வசதியான குடும்பம்.

**ஆட்சியர்:** ஒரு வங்கி அதிகாரியின் பெண்ணை கஞ்சிக்கு வழியில்லாதவன் காதலிக்கிறான் என்றால்.... தெளிவாகத் தெரிகிறதே. இது மோசடியாகத்தான் இருக்கவேண்டும்.

**பையன்:** நான் ஒண்ணும் மோசடி செய்யலை சார்.

**பெண்:** நீங்க என்ன சார், எங்கப்பா மாதிரி பேசுறீங்க.

**ஆட்சியர்:** நாங்கள் ஒரு அப்பா மாதிரி பொறுப்போட விசாரிக்கணும்னுதான், அம்மா சட்டம் போட்டிருக்காங்க. நீ சொல்றது எதுவும் நம்பறமாதிரி இல்லையேம்மா. கட்டாயப்படுத்தலை, ஆசை காட்டல் இல்லை, மோசடியும் இல்லைங்கிற.

இப்படி எந்த செக்ஷன்லயும் வராம ஒரு இந்துப் பெண்ணை முசுலீம் பையன் எப்படிக் காதலிக்க முடியும்? சரி போகட்டும். உண்மையைச் சொல். நீ முசுலீமா மதம் மாறப் போறே. அப்படித் தானே!

**காதலர்கள்:** அதப்பத்தி நாங்க முடிவு செய்யவில்லை.

**ஆட்சியர்:** முடிவு செய்தாக வேண்டும். அப்புறம் குழந்தை பிறந்து விட்டால் பெரிய பிரச்சினை.

**பெண்:** அது எங்கள் பிரச்சினை. நாங்க எங்க சவுகரியப்படி முடிவு செஞ்சுக் கிறோம்.


**ஆட்சியர்:** உங்க சவுகரியப்படி நீங்க எப்படி வேணும்னா முடிவு செஞ்சுக்கு வீங்கன்னா அப்புறம் அரசாங்கம் எதுக்கு? என்ன முடிவா இருந்தாலும் இப்பவே சொல்லு. இல்லைன்னா திருமணத்துக்கு ஒப்புதல் வழங்க முடியாது.

**பெண்:** சரி. நானே முசுலீமா மாறிக் கிறேன்.

**ஆட்சியர்:** அப்படி வா. அதுதான் விவகாரம்.

**பெண்:** இதில் என்ன சார் விவகாரம்? என்னுடைய வசதிக்கு நான் மாறிக் கிறேன். இதுல உங்களுக்கு என்ன பிரச்சினை?

**ஆண் இந்துவாக இருக்கும் பட்சத்தில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கவலைப்படுவதில்லை. பெண் இந்துவாக இருந்தால் அவர்களுக்கு ரத்தம் கொதிக்கிறது. மதமாற்றம் செய்யும் நோக்கத்துக்காகவே கிறித்துவ, முசுலிம் இளைஞர்கள் இந்துப்பெண்களை வலைவீசிப் பிடிப்பதாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். அத்தகைய தம்பதியரை குறிவைத்துக் கொலை செய்கிறார்கள்.**



**ஆட்சியர்:** உன்னுடைய வசதிக்கு, விருப் பத்துக்கெல்லாம் மதம் மாற முடியா தும்மா. அது சட்டப்படி குற்றம். மதம் மாறுவதற்கு ஏதாவது **ஆன்மீகக்** காரணம் இருந்தால் சொல்.

**பெண்:** நான் அவரை ஆத்மார்த்தமா (மனப்பூர்வமா) நேசிக்கிறேன். இதுதான் ஆன்மீகக் காரணம்.

**ஆட்சியர்:** அடடா, இந்த விவரம் புரியாத பொண்ணோட மூச்சுக் கொடுக்க முடியலியே! அம்மா, நீ சொல்ற ஆத்மா வேற, நான் சொல்ற ஆத்மா வேற. நீ சொல்றது காதல் ஆத்மா. நான் சொல்றது மத ஆத்மா.

**பெண்:** ஒரு ஆளுக்கு ஒரு ஆத்மா தானே சார் இருக்க முடியும்?

**ஆட்சியர்:** எதிர்த்துப் பேசாதே! நம்ம நாட்டு சட்டப்படி தலைக்கு ரெண்டு ஆத்மா உண்டு. நீ ஒரு இந்துப் பெண். முசுலீமா மாறப் போறேன்னு சொல்றே. மாறிக்கோ. நான் தடுக்கல, ஆனா நீ ஆன்மீகக் காரணமில்லாம மாற முடியாது.

நாலு வேதம், ஆறு சாத்திரம், 18 புராணங்கள், உபநிடதங்கள் இதெல்லாம் படிச்சிருக்கியா? இதில் இல்லாதது குரானில் என்ன இருக்குன்னு எனக்கு சொல்லிட்டு நீ தாராளமா மதம் மாறிக் கலாம். கல்யாணமும் பண்ணிக்கலாம்.

**பெண்:** நீங்க என்னென்னமோ சொல்றீங்க. அதெல்லாம் நான் கேள்விப் பட்டதேயில்ல சார், நானாவது அப்பப்போ கோயிலுக்கு போவேன், அவரு பள்ளிவாசலுக்கே போறதில்லே.

**ஆட்சியர்:** ஸாரி. தெளிவான ஆன்மீகக் காரணம் சொல்லாட்டி, உங்க விண்ணப் பத்தை நிராகரிக்க வேண்டியிருக்கும்.

**பெண்:** கேட்டா கோவிச்சுக்க மாட்டீங்களே, நீங்க இதெல்லாம் படிச்சிருக்கீங் களா, சார்?

**ஆட்சியர்:** இல்லை. நான் படிச்சதில்லை. படிக்க வேண்டியதுமில்லை. நான் ஒண்ணும் மதம் மாறப் போறதில்லையே! நீ இந்து மதத்திலேயே இருக்கப் போறேன்னா எதுவும் படிக்க வேண்டிய தில்லை. மாறப் போறதாயிருந்தா இதையும் படிக்கணும். அதையும் படிக் கணும்.

**பெண்:** இதெல்லாம் ஆகிற கதையா சார்?

**ஆட்சியர்:** ஆகிற வழி சொல்லட்டுமா? அந்தப் பையனை இந்துவா மாறச் சொல்.

**பெண்:** அவரும் இதெல்லாம் படிச்சு ஆன்மீகக் காரணம் சொல்லணுமே!

**ஆட்சியர்:** தேவையில்லை. ஒரு இந்து, முசுலீமாகவோ, கிறித்தவனாகவோ மாறினால்தான் அது மதமாற்றம். அதுக் குத்தான் ஆன்மீகக் காரணம் சொல்லணும். முசுலீம் இந்துவா மாறினால் அதுக்குப் பேரு "தாய் மதத் துக்கு திரும்புதல்" அதுக்கு எந்தக் காரணமும் சொல்லத் தேவையில்லை.

**காதலர்கள்:** இந்த வம்பே வேண்டாம். இரண்டு பேருக்கும் "மதம் இல்லை"ன்னு போட்டு விடுங்கள். நாங்கள் திருமணம் செய்து கொள்கிறோம்.

**ஆட்சியர்:** என்ன புரியாம பேசுறீங்க? இது மதச்சார்பற்ற நாடு, இங்கே ஒரு இந்தியக் குடிமகன் சட்டப்படி எந்த மதமும் சாராதவனா இருக்கவே முடியாது. எந்த மதமும் இல்லாதவங்களை யெல்லாம் நாங்க இந்து மதக் கணக்கில தான் வரவு வைப்போம்.

**பெண்:** எப்படியோ, நாங்க கல்யாணம் பண்ணிக்கணும். அதுக்கு என்ன சார் செய்யணும்?

**ஆட்சியர்:** தாராளமா செஞ்சிக்கங்க. ஆனால் அந்தப் பையன் 5 வருசம் கம்பி எண்ணனும்; ஒரு லட்சம் ரூபாய் அப


படிப்பகம்

www.padippakam.com

ராதம் கட்டணும். அவ்வளவுதான். மற்றப் படி உங்க தனிப்பட்ட சுதந்திரத்தில எந்த வகையிலும் இந்த அரசாங்கம் தலையிடாது.

●●●

*இது மிகையான கற்பனையோ அல்லது வேண்டுமென்றே எழுதப்பட்ட கேலிச்சித்திரமோ அல்ல; மேற்கண்ட உரையாடலில் மாவட்ட ஆட்சியர் பேசும் வசனங்களை நகைப்புக்குரியவையாக நீங்கள் கருதலாம். அந்த வசனங்கள் ஜெயலலிதாவின் மதமாற்றத் தடைச் சட்டத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை.*

*மத மறுப்புத் திருமணம் எதையும் எந்த மதவாதியும் ஒப்புக் கொள்வதில்லை. இது ஒருபுறமிருக்க, இத்தகைய திருமணங்கள் நடைபெறும் போது இந்த ஆணாதிக்க சமூகத்தில் அநேகமாக ஆணின் மதத்திற்குப் பெண்கள் மாறிவிடுகின்றனர்.*

*ஆண் இந்துவாக இருக்கும் பட்சத்தில் ஆர்.எஸ்.எஸ் காரர்கள் கவலைப்படுவதில்லை. பெண் இந்துவாக இருந்தால் அவர்களுக்கு ரத்தம் கொதிக்கிறது. மதமாற்றம் செய்யும் நோக்கத்துக்காகவே கிறித்துவ, முசுலிம் இளைஞர்கள் இந்துப்பெண்களை வலைவீசிப் பிடிப்பதாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். அத்தகைய தம்பதியரைக் குறிவைத்துக் கொலை செய்கிறார்கள்.*

*தன் இசுலாமியக் கணவனைக் காப்பாற்றியதற்காக, குஜராத்தில் இந்து வெறியர்களால் கல்லால் அடித்தே கொலை செய்யப்பட்ட கீதாபென் என்ற பெண்ணின் கதையை **புதிய கலாச்சாரத்தில்** முன்னர் வெளியிட்டிருந்தோம்.*

*மதமறுப்புத் திருமணத்திற்கு இந்து வெறியர்கள் வழங்குவது மரண தண்டனை; அது சட்டவிரோதமான பாசிசம். ஜெயலலிதாவின் இந்தச் சட்டம் வழங்குவதோ 5 ஆண்டு சிறை; ஒரு லட்சம் அபராதம். இது சட்டபூர்வ பாசிசம்.*

*இனி திருமணம் உள்ளிட்ட எந்தக் காரணத்திற்காக ஒருவர் மதம் மாறினாலும் "அது ஆன்மீகக் காரணத்திற்காக நடந்த மதமாற்றம் தானா" என்று விசாரித்து முடிவு செய்யும் அதிகாரம் எல்லா மாவட்ட ஆட்சியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இனி தமிழகத்திற்கு மொத்தம் 29 சங்கராச்சாரிகள். காஞ்சி மடம்தான் அவர்களது தலைமைப் பீடம்!*

● **அஜித்**

## மதமாற்றத் தடைச்சட்டம்:

# "நான் ஒரு இந்துவாகச் சாக மாட்டேன்"

## அம்பேத்கர் முழங்குகிறார்

"**உ**ங்களை மனிதர்களாகக் கருதுகின்ற, இவ்வுலக வாழ்வில் நீங்கள் உயர்வதற்கு வாய்ப்பளிக்கின்ற, மற்றவர்களைப் போல் செயல்பட, உண்ண, நடக்க, வாழச் சம உரிமை தருகின்ற எந்தவொரு மதத்தையும் நீங்கள் தழுவலாம்."

**அம்பேத்கர் ஜலகானில் ஆற்றிய உரையிலிருந்து (1929)**

"என் போதாத காலம் நான் இந்து தீண்டப்படாதவனாகப் பிறந்து விட்டேன். இவ்வாறு நான் பிறக்க நேர்ந்ததைத் தடுப்பது என் சக்திக்கு அப்பாற்பட்டதாகும். ஆனால் இந்து மதத்தின் மரியாதை கெட்ட இழிவுபடுத்தும் சூழ்நிலையின் கீழ் வாழ மறுப்பது என் சக்திக்கு உட்பட்டதே ஆகும். ஆகவே நான் ஒரு இந்துவாகச் சாக மாட்டேன் என்று உங்களிடம் உறுதி கூறுகிறேன்"

**இயோலா மாநாட்டு உரை (1935)**

"இந்து மதத்தில் தீண்டாமை என்பது ஒருவித அழுக்கு என்று சிலர் கூறுகின்றார்கள். எப்படியும் இக்கருத்து எவ்வித உணர்வையும் வெளிப்படுத்துவதாக இல்லை. இந்துமதமே ஒரு 'சாக்கடை'. அதை யாருமே உணர்ந்ததாய்த் தெரியவில்லை. இருப்பினும் பெரும்பான்மை இந்துக்கள் - உங்களைக் கழிவுகள் என்றும் கறை படிந்தவர்கள் என்றும் கருதுகிறார்கள்.

"இவர்கள் நாவிலே ராமனையும் - கைகளிலே கூர்வாளையும் வைத்திருப்பார்கள். யோகிகளைப் போன்று பேசுவார்கள். ஆனால், கொலைகாரர்களாக நடந்து கொள்வார்கள். கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறான் என்பார்கள். ஆனால், விலங்கிலும் கேவலமாக மனிதனை நடத்துவார்கள். இவர்களுடன் சேராதீர்கள். இவர்கள் மிகக் கொடிய வஞ்சனையாளர்கள்." எறும்பிற்கு சர்க்கரை உணவிடுவார்கள்; ஆனால், இங்குள்ள மனிதர்கள் குடிப்பதற்கு - நீரெடுக்கத் தடை விதிப்பார்கள். இவர்களுடன் தொடர்பு கொள்ளாதீர்கள்.

**"இவர்கள் நாவிலே ராமனையும் – கைகளிலே கூர்வாளையும் வைத்திருப்பார்கள். யோகிகளைப் போன்று பேசுவார்கள். ஆனால், கொலைகாரர்களாக நடந்து கொள்வார்கள். கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறான் என்பார்கள். ஆனால், விலங்கிலும் கேவலமாக மனிதனை நடத்துவார்கள். இவர்களுடன் சேராதீர்கள். இவர்கள் மிகக் கொடிய வஞ்சனையாளர்கள்."**

இந்துக்களின் பார்வையில் மட்டும் நாம் தாழ்ந்தவர்களில்லை; இந்தியா முழுவதும் நாம் தாழ்த்தப்பட்டவர்கள். இந்த மானம் கெட்ட நிலையிலிருந்து நீங்கள் விடுபட்டு, பயனுள்ள வாழ்நிலையை அடைய வேண்டுமானால், அதற்கு ஒரே வழிதான் உண்டு. உங்களைப் பின்னி பிணைந்துள்ள இந்துமதச் சங்கிலியை அறுத்தெறிந்துவிட்டு - வெளியேறுவது ஒன்றே அச்சிறந்த வழி என்று நான் உறுதியாகக் கூற முடியும்."

**இயோலா மாநாட்டுப் பேருரையில்**

"சாதி இந்துக்களின் மன மாற்றத்துக்காக நான் இன்னும் ஐந்து முதல் பத்தாண்டுகள் வரை காத்திருக்க முடியும். ஆனால் இதற்கிடையில் கேசரி பத்திரிகை வட்டத்தாரால் (திலகரைச் சார்ந்தவர்கள்) மிகச் சிறந்த இந்துவாகக் கருதப்படுகின்ற தீண்டப்படாத வகுப்புத் தலைவரான **கே.கே. சகத்தை** சங்கராச்சாரியார் பதவியில் மராத்திய சித்பவன் பார்ப்பனர்கள் ஓராண்டுக் காலத்திற்கு அமர்த்த வேண்டும். மனம் மாறியதற்கும் சமத்துவத்தை ஏற்றுக் கொண்டதற்கும் அடையாளமாக ஒரு நூறு சித்பவன் பார்ப்பனக் குடும்பங்கள் புதிய **சகத்** சங்கராச்சாரியாரின் காலில்



படிப்பகம்

www.padippakam.com

விழுந்து வணங்க வேண்டும்.''

**- மதம் மாற வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட மசுர்கர் மகராஜிடம் அம்பேத்கர் கூறியது - (1935)**

''கடவுளையே என் கண் முன் நிறுத்தி இந்து மதத்தை விட்டுப் போகாதே என்று சொன்னாலும், மதம் மாறுவது என்ற என் முடிவிலிருந்து நான் பின் வாங்க மாட்டேன்.''

**- பூனா மாநாட்டு உரை (ஜன ' 1936)**

''இந்து மதத்தவன் ஒருவனுக்கு 'தர்மம்' என்பது கடமைகளும், கட்டுப்பாடுகளும்தான். தர்மத்தைப் பற்றி வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் கூறி இருப்பதைப் பார்த்தால் இது தெளிவாகும். வேதங்களில் பெரும்பாலும் 'தர்மம்' என்ற சொல், மதச் சட்டங்கள், மதச் சடங்குகள் என்ற பொருளிலேயே கையாளப்படுகின்றது. உண்மையில் இந்துக்கள் 'மதம்' என்று அழைப்பது சட்டங்களைத்தான்; அல்லது சட்டமாக ஆக்கப்பட்டுள்ள வகுப்புவாரி நீதிநெறிகளைத்தான்.

இந்து சட்டங்களின் தொகுப்பை 'மதம்' என்று சொல்ல நான் மறுக்கிறேன். மதம் என்று தவறான பெயரிட்டு மக்கள் முன்பு நிறுத்தப்படுகின்ற - இது போன்ற சட்டத் தொகுப்பால் விளைகின்ற கேடுகள் பல. ஒழுக்கத்தோடு வாழும் சுதந்திரமான, தன்னிச்சையான வாழ்க்கையை இது மறுக்கின்றது.



மாறாக, இது அடிமைத்தனமாக ஏற்றுக் கொண்டு நடக்கின்ற இழிநிலைக்கு - வாழ்க்கையைத் தள்ளி விடுகின்றது. எல்லா வகுப்புக்கும் பொதுவான ஒரே சட்டம் இல்லை என்ற வகையில் இது மோசமானது. இந்த சட்டத் தொகுப்பை எவ்வித மாற்றமும் இன்றி மனித இனம் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்? எனவே, அதுபோன்ற ஒரு மதத்தை அழித்தாக வேண்டும் என்று கூறுவதில் எனக்குத் தயக்கம் எதுவுமில்லை.

**- அம்பேத்கர், ஆங்கில நூல் தொகுப்பு - 1**

'மதம் மாறுவதால் உங்களுக்குக் கிடைக்கப் போகும் நன்மை என்ன?' என்று என்னிடம் சிலபேர் கேட்கிறார்கள். 'சுதந்திரத்தினால் இந்தியாவிற்கு என்ன நன்மை கிடைக்கப் போகிறது?' என்பதே அவர்களுக்கு என் பதிலாகும். இந்தியாவிற்குச் சுதந்திரம் எப்படித் தேவைப்படுகிறதோ அதைப்போல, தீண்டப்படாதவர்களுக்கு மதமாற்றம் தேவைப்படுகிறது. இந்த இரண்டு இயக்கங்களின் அடிப்படை நோக்கம் சுதந்திரம் பெற வேண்டும் என்பதேயாகும்.

மதம் மாறுவதால் தீண்டப்படாதவர்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டார்கள். எந்த மதத்தில் சேருகிறார்களோ அந்த மதத்தினரின் ஆதரவு அவர்களுக்குக் கிடைக்கும்.

என்னைப் பொறுத்தமட்டில் இந்து மதத்திற்கு ஒரேயடியாக முழுக்குப் போட்டுவிடுவது என்று முடிவு செய்து விட்டேன். என்னுடைய மதமாற்றம் வாழ்க்கை நலன்களை நோக்கமாகக் கொண்டதன்று. நான் ஒரு தீண்டப்படாதவனாக இருந்து கொண்டே இவ்வுலகில் என்னால் எதையும் அடைய முடியும். எனவே என்னுடைய மதமாற்றத்திற்கு அடிப்படையாக இருப்பது ஆன்மீக உணர்வு தவிர வேறொன்றுமில்லை. இந்து மதம் என் சிந்தனையை ஆட்கொள்ளவில்லை. என் சுயமரியாதை உணர்வு இந்து மதத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

ஆனால் உங்களைப் பொறுத்தவரையில் இவ்வுலகில் நல்லதோர் வாழ்க்கையைப் பெறுவதற்காகவும் உங்களுடைய சமய உணர்வுகளை நிறைவு செய்வதற்காகவும் மதமாற்றம் உங்களுக்கு வேண்டியதாய் இருக்கிறது. உங்கள் வாழ்க்கை நலன்களைப் பெறுவதற்காக நீங்கள் மதம் மாறுவதை முட்டாள்தனமாகப் பழித்துக் கூறுகிறவர்களின் கருத்துக்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.

இறந்தபின் கிடைக்கப் போவதாகக் கூறுகின்ற - மேலுலக் வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்ற மதத்தால் நமக்கு என்ன பயன்? ஒரு பணக்காரர் வேண்டுமானால் அவருடைய ஓய்வு நேரத்தில் மேலுலகச் சிந்தனையில் தோய்ந்து மகிழ முடியும். இவ்வுலகில் மேல்தட்டில் இருப்பவர்களும் செல்வ வளம் பெற்றவர்களும் செத்தபின் கிடைக்கப்போகும் வானுலக வாழ்வை நினைத்துக் காலம் கழிக்க முடியும். ஆனால் உங்களுடைய மானத்தை, செல்வத்தை, உணவை, வாழிடத்தை உங்களிடமிருந்து பறித்த இந்து மதத்தில் நீங்கள் ஏன் இருக்க வேண்டும்?

நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மதம் மனிதனுக்காகவே; மனிதன் மதத்திற்காக இருப்பவன் அல்ல. உங்கள் செயல்திறனைப் பெருக்கி அதை ஒன்றுதிரட்டி இவ்வுலகில் நீங்கள் வெற்றியடைய வேண்டுமானால் நீங்கள் மதத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.

உங்களை மனிதர்களாக மதிக்காத, நீங்கள் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்காத - உங்களைக் கோயிலுக்குள் நுழைய அனுமதிக்காத மதத்தை நல்ல மதம் என்று எப்படிக் கருத முடியும்? நீங்கள், கல்வி கற்பதற்குத் தடைவிதிக்கின்ற, உங்களுடைய பொருளாதார முன்னேற்றத்தில் குறுக்கிடுகின்ற மதத்திற்கு 'மதம்' என்ற பெயர் இருக்கலாமா? தன் மதத்தைச் சேர்ந்த சகோதரர்களுடன் பழகும்போது அவர்களை மனிதத் தன்மையுடன் நடத்த வேண்டும் என்று கற்பிக்காத மதம் ஒரு மதமன்று; அது ஒரு ஆதிக்கச் சக்தியே ஆகும்.

விலங்குகளிடமும் அன்பு காட்டுங்கள் என்று தன்னைப் பின்பற்றுபவர்களுக்குப் போதிக்கின்ற மதம், மனிதன் தொட்டால் தீட்டு என்று கூறுவது போலித்தனமானதல்லவா? சில வகுப்பினரை மட்டும் கல்வி கற்பதிலிருந்து விலக்கி வைத்துவிட்ட மதம், அவர்கள் செல்வம் சேர்ப்பதையும் ஆயுதங்கள் ஏந்துவதையும் தடை செய்து விட்ட மதம் — அவமானத்தின் சின்னமே ஆகும். அறியாமையில் இருப்பவர்கள் அறியாமையிலேயே அமுந்திக் கிடக்க வேண்டும் என்றும், ஏழைகள் என்றென்றும் ஏழைகளாகவே இருக்க வேண்டும் என்றும் கட்டாயப்படுத்துகின்ற மதம் ஒரு தண்டனையே ஆகும்.''

**- பம்பாயில் நடைபெற்ற மகார் வகுப்பினர் மாநாட்டுரை (மே'1936)**

---

''இந்து மதம் என்பது ஒரு மதமே அல்ல; அது ஒரு தண்டனை'' என்கிறார் அம்பேத்கர். இந்தத் தண்டனையிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் தப்பிக்க முயற்சித்தால், சிறைத் தண்டனை என்று மிரட்டுகிறது ஜெயலலிதாவின் இந்தக் கருப்புச் சட்டம்.

*குறிப்பு: மேலே தொகுத்துத் தரப்பட்டுள்ள அம்பேத்கரின் மேற்கோள்கள் தனஞ்செய்கீர் எழுதிய ''டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு'' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. தமிழாக்கம்: க. முகிலன், வெளியிட்டோர்: மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, சென்னை - 5.*

●



படிப்பகம்

www.padippakam.com

## மதமாற்றத் தடைச்சட்டம்:

# தீண்டாமை க்ஷேமகரமானது பறையர்களை கோயிலுக்குள் விடக் கூடாது

## — செத்துப்போன சங்கராச்சாரி

காஞ்சிபுரத்துக்கு அருகில் உள்ள கூத்திரம்பாக்கம் கிராமத்தில் 50 தலித் குடும்பங்கள் இசுலாமுக்கு மதம் மாறப் போவதாக அறிவித்துள்ளார்கள். அவர்களைச் 'சமாதானம்' செய்ய முயன்று தோற்ற அரசு, இசுலாமியத் தலைவர்களை ஊருக்குள் வரவிடாமல் போலீசை வைத்துத் தடுத்து வருகிறது. இது மத மாற்றத் தடைச்சட்டம் வருவதற்கு முன்னாலேயே நடந்த சம்பவம். ஒருவகையில் இந்த 'அவசர'ச் சட்டத்துக்கு இதுவும் ஒரு காரணம்.

திருவிழாவின் போது முத்துமாரியம்மனின் ஊர்வலம் தங்கள் தெருவுக்கும் வரவேண்டும் என்பதுதான் தலித் மக்களின் கோரிக்கை. 1979 முதல் நடந்து வரும் இந்தப் போராட்டத்தில் 'மேல்' சாதி வெறியர்கள் கடுகளவும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

தற்போது சமரசம் பேச வந்த அ.தி.மு.க அமைச்சர் சோமசுந்தரம் ''உங்களுக்குத் தனிக் கோயில் கட்டித் தருகிறேன்'' என்று ஆசை காட்டியிருக்கிறார். ''அதைக் கட்டிக் கொள்ள எங்களுக்குத் தெரியும்'' என்று முகத்தில் காறித்துப்பியதைப் போல பதில் கொடுத்திருக்கிறார்கள் தலித் மக்கள்.

அகில உலகப் பிரச்சினைகள் அனைத்துக்கும் அத்தாரிட்டியான 'ஜகத்'குரு, உள்ளூரில் நடக்கும் விவகாரத்தைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியுமா? அயோத்தி பிரச்சினை போலவே ஒரு கட்டைப்பஞ்சாயத்து நடத்தியிருக்கிறார்.


''உங்க தெரு சுத்தமாயில்ல. அதனால சாமி அங்க வர முடியாது'' என்று தீர்ப்பு சொல்லியிருக்கிறார். ''மத்த தெருவை விட நாங்க சுத்தமாத்தான் வச்சிருக்கோம்'' என்று உடனே பதிலடி கொடுத்திருக்கிறார்கள் தலித் இளைஞர்கள்.

உள்ளூரிலேயே செருப்படிபட்ட பிறகும் உலக குருவின் வாய் ஓயவில்லை. ''தலித் என்று சொல்லக்கூடாது; ஹரிஜன் என்றுதான் சொல்ல வேண்டும். ஹரிஜனங்கள் அன்றாடம் காலையில் எழுந்து குளித்து கோயிலுக்குச் செல்ல வேண்டும்; மது, மாமிசம் சாப்பிடக் கூடாது. ஹரிஜனங்கள் தம் கடமையைச் சரிவரச் செய்யாததனால்தான் உரிமை போய்விட்டது'' என்று உடம்பில் பிதுங்கிக் கொண்டிருக்கும் பார்ப்பனக் கொழுப்பு முழுவதையும் வாய் வழியாகக் கக்கியிருக்கிறார்.

தலித்துகளைச் 'சுத்தம்' செய்வது இருக்கட்டும்; இந்த சங்கராச்சாரியின் ஊத்தை வாயை எந்த ஆசிட்டை ஊற்றித் தேய்த்தாலும் சுத்தம் செய்ய முடியாது. பார்ப்பன வெறியையும் தீண்டாமையையுமே தனது முழு முதற் கொள்கையாக வைத்திருக்கும் சங்கர மடத்திற்குப் பல ஆசனவாய்களும் உண்டு. சீர்திருத்த வாதிகள் என்ற போர்வையில் அவர்கள் வெளியிடும் 'வாயு'வோ குடலைப் புரட்டுகிறது.

26.10.2002 தினமணியில், ஜோதிர்லதா கிரிஜா என்ற எழுத்தாளர் ''குற்றவாளிகள் யார்?'' என்ற தலைப்பில் நடுப்பக்கக் கட்டுரை எழுதியிருக்கிறார். தீண்டாமைக்கு இந்து சாத்திரங்களின் அங்கீகாரம் உண்டு என்று வட மாநிலத்தைச் சேர்ந்த ஒரு சங்கராச்சாரி சொன்னாராம். அதில் உண்மை இல்லையாம். அப்படியே இருந்தாலும் அதை நீக்குவதுதான் சங்கராச்சாரிகளின் கடமையாம்.

இதைச் சொல்லிவிட்டு செத்துப்போன காஞ்சி சங்கராச்சாரியை வடக்கத்தி சங்கராச்சாரியுடன் ஒப்பிடுகிறார் இந்த மாமி. ஒரு அமெரிக்க கிறித்தவர் இந்துவாக மதம் மாற விருப்பம் தெரிவித்த போது ''உண்மையான கிறித்தவனுக்கும் உண்மையான இந்துவுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. எனவே நீ கிறித்த






''மனிதனை மனிதனாக நடத்தாத இந்து மதத்தை விட்டு வெளியேறுகிறோம்'' — கூத்திரம்பாக்கத்து மக்கள்.



படிப்பகம்

www.padippakam.com

**தலித்துகளைச் 'சுத்தம்' செய்வது இருக்கட்டும்; இந்த சங்கராச்சாரியின் ஊத்தை வாயை எந்த ஆசிட்டை ஊற்றித் தேய்த்தாலும் சுத்தம் செய்ய முடியாது, பார்ப்பன வெறியையும் தீண்டாமையை யுமே தனது முழு முதற் கொள்கையாக வைத்தி ருக்கும் சங்கர மடத்திற்குப் பல ஆசனவாய்களும் உண்டு. சீர்திருத்தவாதிகள் என்ற போர்வையில் அவர்கள் வெளியிடும் 'வாயு'வோ குடலைப் புரட்டுகிறது.**

வனாகவே இரு'' என்று அவர் சொல்லிவிட்டாராம். மதம் மாற்ற முயலும் பாதிரியார்களுக்கு சங்கராச்சாரியின் இந்தப் 'பெருந் தன்மையை'ச் சுட்டிக்காட்டுகிறார் மாமி.

அந்தப் பெருந்தன்மையின் உண்மை முகம் நூல் வடிவில் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கிறது. 1933–இல் ''மதராஸ் லா ஜர்னல் ஆபீஸ்'' என்ற நிறுவனம் வெளியிட்டுள்ள சங்கர விஜயம் எனும் நூலில் ''பறையனைக் கோவிலுக்குள் விடக் கூடாது'' என்ற தனது கருத்தை ஆணித்தரமாகவும், வெறியு டனும் கூறியிருக்கிறார் செத்துப்போன சங்கராச்சாரி.

அருள்வாக்கு என்ற தலைப்பில் சங்கராச்சாரியின் 'பொன்' மொழிகளைத் தொகுத்து வெளியிட்ட ஆனந்தவிகடன் தந்திர மாக இதைத் தணிக்கை செய்து விட்டது. அந்தப் பகுதி கீழ் வரு மாறு:

●●●

*''ஒருநாள் ஸ்ரீ சங்கராச்சாரியார்கள் (ஆதிசங்கரர்) ஸ்நானத் துக்குப் போனார்கள். அப்பொழுது ஒரு பறையன் வேண்டு மென்றே அவர் பக்கத்தில் வந்தான். அவனைப் பார்த்து 'எட்டிப்போ' என்று ஸ்ரீசங்கரர் சொன்னார். அவன் உடனே சில கேள்விகள் கேட்க ஆரம்பித்தான்.*

*''எதையோ போகச் சொல்லுகிறீரே; எதிலிருந்து எதை எட்டிப் போகச் சொல்லுகிறீர். சாதம் சாப்பிட்டு அதனாலுண் டான எலும்பு, மாம்ஸம் முதலியவைகள் உள்ள ஒரு கூட்டுக்கு அதே மாதிரி எலும்பு மாம்ஸம் உள்ள ஒரு கூடு தூரத்தில் இருக்க வேண்டும் என்பது உம்முடைய அபிப்பிராயமா? அல்லது அந்தக் கூட்டுக்குள் உள்ள சைதன்யமானது (ஆன்மா) கிட்ட வரக் கூடாது என்பது அபிப்பிராயமா? என்று அவன் கேட்டான்...*



''கிறித்தவ மதத்திற்கு மாறியதற்காக உரிமையைப் பறிக்காதே'' — கேரள தலித் மக்கள்.



**கண்டதேவி ஆதிக்க சாதிவெறியாட்டம்: ஊர் கூடித் தேர் இழுக்கலாம்; சேரி கூடி இழுக்க முடியுமா?**

*உடனே ஸ்ரீ ஆச்சாரியர்கள் ''தாங்கள் இப்பேர்ப்பட்டவர் களா? இப்படிப்பட்ட ப்ரம்மவித்துக்கள் யாராயிருந்தாலும் அவர்கள்தான் எனக்குக் குரு ஸ்தானம்'' என்று சொன்னார்...*

*ஐந்து சுலோகங்கள் பதிலாகச் சொன்னார்...*

*அவை மனீஷா பஞ்சகம் என்று சொல்லப்படும். அந்தப் பறையன் யார்? விச்வேசுவரரே (இறைவனே)...*

*முதலில் ஸ்ரீ சங்கராச்சாரியர்கள் லோகரீதிக்காக (உலக நடப் பையொட்டி) எட்டிப்போ என்று சொன்னார். அவனுடைய க்ஷேமத்திற்காகவும் அப்படிச் சொன்னார். அவன் அபேத (ஞான) நிலையை அடைந்தவன் என்று தெரிந்து கொண்டதும் இப்படிச் சொன்னார். ''தாங்கள் வாஸ்தவமாக இப்படிப்பட்ட நிலையை அடைந்தவர்களானால்'', என்று அதற்காகத்தான் சொன்னார்கள்.*

*இந்த சுலோகத்தை வைத்துக் கொண்டு ஸ்ரீ ஆச்சாரியர்கள் தீண்டாமையை ஸ்தாபிப்பதாக நமக்குத் தோன்றுகிறது. எந்த ஸித்தாந்தத்தில் ஒருவருக்கு ஆசை இருக்கிறதோ அதற்குத் தகுந் தபடி அவர்கள் சுலோகங்களுக்கு வேறு அர்த்தம் செய்து கொள்வார்கள். தீண்டாமை க்ஷேமகரமானது (மிகவும் நல்லது) என்ற எண்ணம் நமக்கு இருப்பதால் அநாதியாக நாம் இப்படி அதற்கு அர்த்தம் பண்ணிக் கொண்டு வருகிறோம். அனுஷ் டானம் செய்து கொண்டும் வருகிறோம். அவர்கள் புதிதாக அர்த்தம் செய்கிறார்கள்...*

*எல்லாவற்றிலும் கட்டுப்பாடு (Restriction) இருக்க வேண்டும். இன்ன ஜாதியில்தான் கல்யாணம் செய்ய வேண்டும் என்ற விவஸ்தை இருக்க வேண்டும். மனது போனபடி நடக் காமல் ஆசையைப் பலவழிகளில் குறைத்துக் கொள்ள வேண்டும்...*

**கோயில்கள் தங்கள் உரிமைகளை ஸ்தாபிக்கும் இடங்களல்ல. பக்தி பண்ண ஏற்பட்ட இடங்கள். இப்பொழுதுள்ள கிளர்ச்சிக்காரர்கள் தரிசனத்துக்காகக் கோயிலுக்குப் போகும் சிரத்தையுடையவர்கள் அல்ல, பறையர்களைக் கோயில்களுக்குள் விடும் பாத்யஸ்தாபனத்திற்காகவே (உரிமையை நிலைநாட்டவே) இப்போழுது வருகிறார்கள்...**



படிப்பகம்

www.padippakam.com

*ஒவ்வொரு ஜாதி ஸமூஹத்தினிடையிலும் தனித்தனியாகச் சிறப்புக் கடமைகள் பரம்பரையாய் வந்து கொண்டிருக்கின்றன. அப்படியிருப்பவர்கள் எல்லாரோடும் கலந்து தொட்டுப் பழகாமலும் கலந்து உண்ணாமலும் கலந்து விவாஹம் செய்யாமலும் இருந்தால்தான் அந்த அந்த அனுஷ்டான நியமங்களைப் பரம்பரையாகச் சுத்தமாக ரக்ஷித்துக் கொண்டு வர முடியும்...*

*ஒரு சீர்திருத்தக்காரர் (Retomer) ஒன்றை உடைத்தால் அடுத்தபடி வருகிறவர் அவர் அதை உடைத்தாரே இதையும் ஏன் நாம் உடைக்கக் கூடாது என்று பாக்கி உள்ளதையும் உடைக்க ஆரம்பிப்பார்.*

*ஒரு வேலியை உடைத்து விட்டால் எல்லா வேலியும் காலக்கிரமத்தில் போய்விடும். ஒரு விஷயத்தை மீறும் துணிவு முதலில் ஏற்பட்டால் அதுவே பாக்கி எல்லாவற்றிற்கும் வந்து விடும்...*

*மனீஷா பஞ்சகத்தால் தீண்டாமை போயிற்றென்று சொல்லுவது தவறு. நம்மை மீறி ஓர் அதர்மம் உலகில் ஏற்பட்டு வந்துவிட்டால், அதைத் தடுக்க முடியாமலும் போய்விட்டால், அந்தக் காரணத்தைக் கொண்டு அதுதான் நியாயம், அதைத்தான் செய்ய வேண்டும் என்று சொல்லுவது தப்பு. நாம் நம்முடைய பரம்பரை தர்மத்தை நம்மால் கூடிய வரையில் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்...*

*இப்பொழுதுள்ள சீர்திருத்தக்காரர்கள் நீங்கள் கலப்புக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டாம். சேர்ந்து போஜனம் பண்ண வேண்டாம். தீண்டாமையை மட்டும் விட்டு விடுங்கள் என்று சொல்லுகிறார்கள்...*

*அடுத்தபடி அதுவும் பரவாயில்லை என்று யாராவது சொன்னால் அதையும் ஸரி யென்று சொல்லுவார்கள்...*

*கோயில்கள் தங்கள் உரிமைகளை ஸ்தாபிக்கும் இடங்களல்ல. பக்தி பண்ண ஏற்பட்ட இடங்கள். இப்பொழுதுள்ள கிளர்ச்சிக்காரர்கள் தரிசனத்துக்காகக் கோயிலுக்குப் போகும் சிரத்தையுடையவர்கள் அல்ல, பறையர்களைக் கோயில்களுக்குள் விடும் பாத்யஸ்தாபனத்திற்காகவே (உரிமையை நிலைநாட்டவே) இப்பொழுது வருகிறார்கள்...*

*சாஸ்திரத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்குக் கோயிலில் என்ன காரியம்? முதலில் அவர்களை விடாமல் போனால் பறையன் தானே நின்று கொள்ளுவான். நாம் ஸத்தியமாகவும் சாஸ்திரத்தின்படியும் நடக்கிறோமென்று தெரிந்தால் அநாசாரப் பிரசங்கிகளுக்குத் தானாகப் பயம் ஏற்படும். நாம் இப்படிக் கடுமையாக ஆரம்பித்தால்தான் இந்த முயற்சிகளெல்லாம் நின்று போகும்.''*

●●●

**கி**றித்தவனை இந்து மதத்தில் 'சேரவேண்டாம்' என்று அறிவுரை சொன்னதற்கும், தாழ்த்தப்பட்டவனைக் கோயிலுக்குள் 'சேர்க்கமாட்டோம்' என்று திமிர்த்தனம் பேசுவதற்கும் அடிப்படை தீண்டாமைதான்.

இந்த உண்மையை மறுக்கவியலாத வண்ணம் ஆதாரபூர்வமாக நிலைநாட்டியிருக்கிறார் அம்பேத்கர். காஞ்சி மடம் முதல் கூத்திரம்பாக்கம் வரை இந்தக் காலம் வரை நடைமுறைப்படுத்தப்படுவதும் இதுதான்.

இவை அனைத்தையும் மறைத்துக் கொண்டு சீர்திருத்தவாதி போலவும் மிதவாதி போலவும் நாடகமாடும் தமிழ்நாட்டுப் பார்ப்பனக் கும்பல்தான் 'வடக்கத்தி சங்கராச்சாரியை'க் காட்டிலும் அபாயகரமான எதிரிகள்! ●

**கிறித்தவனை இந்து மதத்தில் 'சேர வேண்டாம்' என்று அறிவுரை சொன்னதற்கும், தாழ்த்தப்பட்டவனைக் கோயிலுக்குள் 'சேர்க்கமாட்டோம்' என்று திமிர்த்தனம் பேசுவதற்கும் அடிப்படை தீண்டாமைதான்.**

## தலித் ஒருவர் சங்கராச்சாரி ஆக முடியுமா?

*''கிராமங்களில் இன்னும் இரட்டை டம்ளர் போன்ற சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. அதேபோல் சில தெருவுக்குள் சாமி வருவது இல்லை என்ற புகாரும் உள்ளது. எப்போதும் இறையுணர்வோடு, பக்தி சிரத்தையாக பூசை நடத்தினால் அந்த இடத்துக்கு சாமி ஊர்வலம் வரும். அப்படி இல்லாமல் ஒரு நாளைக்கு மட்டும் கூப்பிட்டால் அது முறையாகாது. எங்கே கூப்பிட்டாலும் வரக்கூடிய சாமி தான் நம் சாமி.''*

**— தினமணி, நவம்பர்-1, 2002**

இது கடற்கரையில் சங்கராச்சாரி பேசியது. ''தலித் மக்களுக்கு உண்மையான பக்தி இல்லை என்றும், சும்மா வம்புக்குத்தான் அவர்கள் சாமி ஊர்வலத்தைக் கூப்பிடுகிறார்கள்'' என்பதும்தான் சங்கராச்சாரியின் கருத்து. இதைவிடச் சாதித் திமிர் பிடித்த கருத்தை வேறெந்தக் கயவனும் கூடச் சொல்ல முடியாது.

இதையும் சொல்லிவிட்டு, இந்துமதத்தில் தீண்டாமை இல்லை என்றும் அதே மூச்சில் சொல்வதற்கு சங்கராச்சாரி வெட்கப்படவில்லை.

இந்து மதத்தில் தீண்டாமை இல்லை என்று சொல்கிறீர்களே, தலித்துகளுக்கு உங்கள் காஞ்சி மடத்தில் வேதம் கற்றுக் கொடுப்பீர்களா என்று நிருபர்கள் கேட்டதற்கு ''யாருக்கு என்ன சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும்'' என்று திமிராகப் பதில் வந்திருக்கிறது.

''தலித் ஒருவர் சங்கராச்சாரியாக முடியுமா'' என்று கேட்டதற்கு ''அப்படி வருபவரின் தகுதியை மடம்தான் தீர்மானிக்கும்'' என்று பதில் சொல்லியிருக்கிறார் சங்கராச்சாரி. ஒரு பார்ப்பனத்தியின் வயிற்றிலிருந்து வெளியே வந்திருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறென்ன உயர்ந்த தகுதி வேண்டும்?

தீண்டாமை பற்றிப் பழைய சங்கராச்சாரியும் புது சங்கராச்சாரியும் கூறியதை ஒப்பிட்டுப் பாருங்கள். உண்மை புரியும்.



படிப்பகம்

www.padippakam.com

4

# குஜராத்: இந்துத்துவத்தின் சோதனைச் சாலை

● மருதையன்

இன்று குஜராத் படுகொலைக்குத் தலைமை தாங்கிய பார்ப்பன பனியாபடேல் சாதிகளைச் சேர்ந்த மேல்தட்டு வர்க்கம்தான் 1980 இல் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான கலவரத்தையும் முன்நின்று நடத்தியது" என்று குறிப்பிட்டு சென்ற இதழில் இத்தொடரை முடித்திருந்தோம்.

குஜராத் சாதிவெறிக் கலவரத்தின் பின்னணியைப் பரிசீலிக்குமுன் அதே காலகட்டத்தில் சங்க பரிவாரம் இந்திய அரசியலில் கடைப்பிடித்த செயல் தந்திரத்தை அறிந்து கொள்வது அவசியம். அத்வானியின் கீழ்க்கண்ட பேட்டி அதனைத் தெளிவுபடுத்துகிறது.

''ஜனசங்கம் எந்த அளவுக்குத் தனது கொள்கைகளைத் தளர்த்திக் கொண்டதோ அந்த அளவுக்கு அதன் செல்வாக்கு அதிகரித்தது. எப்போதெல்லாம் தனது கொள்கையில் ஜனசங்கம் விடாப்பிடியாக இருந்ததோ அப்போதெல்லாம் அதன் செல்வாக்கு குறைந்தது.''

–ஆர்.எஸ்.எஸ் வார இதழான **பாஞ்சஜன்யா** – 1980 தீபாவளி மலரில் அத்வானியின் பேட்டி.

அத்வானி இப்படிப் பேசியிருக்கக் கூடுமா என்று வாசகர்கள் சிலர் ஆச்சரியப்படலாம். ஒரு வாக்கும் ஒரு நாக்கும் கொண்ட மனிதர்கள் விசயத்தில்தான் இத்தகைய ஆச்சரியங்கள் செல்லுபடியாகும். அத்வானியின் சொற்களை ஆராய்வதைக் காட்டிலும் அவை உச்சரிக்கப்பட்ட சூழ்நிலையை ஆராய்வது முக்கியமானது.

இந்தப் பேட்டி வெளியாகும் போது ஜனதாக் கட்சி படுதோல்வியடைந்து பொதுத் தேர்தலில் இந்திரா வெற்றி பெற்றிருந்தார். ஜனதா என்ற முகமூடி நைந்து கிழிந்து போனதால் பாரதிய ஜனதா என்ற புதிய கட்சியை 1980 ஏப்ரல் 5 ம் தேதி சங்கபரிவாரம் துவக்கியிருந்தது.

**இன்று குஜராத் படுகொலையின் போது ''இந்துக்களே எச்சரிக்கை! முசுலீம்கள் தாக்க வருகிறார்கள்'' என்று தலைப்புச் செய்தி வெளியிட்ட அதே குஜராத்தி பத்திரிகைகள், அன்று ''தாழ்த்தப்பட்டவர்கள் தாக்க வருகிறார்கள்'' என்று செய்தி வெளியிட்டன.**

இந்து மதவெறி அரசியலை அடக்கி வாசிப்பதன் மூலமும், ஜெயப்பிரகாஷ் நாராயணனின் உண்மையான வாரிசுகளாகத் தங்களைச் சித்தரித்துக் கொள்வதன் மூலமும்தான் கட்சியின் அடித்தளத்தை விரிவுபடுத்திக் கொள்ள முடியும் என்று சங்கபரிவாரம் கருதியது.

''காந்திய சோசலிசமும் நேர்மறையான மதச்சார்பின்மையும்தான் பாரதிய ஜனதாவின் கொள்கைகள்'' என்று பிரகடனம் செய்தார் வாஜ்பாய். இதில் சோசலிசம் என்ற சொல்லின் உண்மையான பொருளை 'காந்தியம்' ரத்து செய்து விட்டது; மதச்சார்பின்மை என்ற சொல்லின் கழுத்தில் 'நேர்மறை' என்ற உரிச்சொல் கத்தியை வைத்திருந்தது.

அன்று அரசியல் ரீதியில் தற்காப்பு நிலையில் இருந்தபோது 'நேர்மறை மதச்சார்பின்மை' என்று வாஜ்பாய் கூறிய தன்னிலை விளக்கம்தான், பத்தாண்டுகளுக்குப் பின் பாரதிய ஜனதா தாக்குதல் நிலை எடுத்த போது ''போலி மதச்சார்பின்மை'' என்ற விமரிசனமாக அத்வானியின் வாயிலிருந்து வெளிவந்தது.

அன்றைய சூழலில் தனது ஜனநாயக முகமூடிக்கு வண்ணம் கூட்டுவதற்காக, ராம்ஜேத்மலானி, சாந்திபூஷன் போன்ற பிரபல வழக்குரைஞர்களையும்; சிக்கந்தர்பக்த் என்ற முன்னாள் சிண்டிகேட் காங்கிரசு தலைவரையும் கட்சியில் சேர்த்து அவர்களுக்கு உடனே தலைமைப் பதவியையும் வழங்கியது பாரதிய ஜனதாக் கட்சி.

தன்னை மதச்சார்பற்ற கட்சியாகக் காட்டிக் கொள்வதற்காக இன்னும் பல நம்ப முடியாத கழைக்கூத்துகளையெல்லாம் பா.ஜனதா கட்சி நடத்திக் காட்டியது. ஏற்கனவே ஜனதா ஆட்சியில் மதமாற்றத் தடைச்சட்டத்தைக் கொண்டு வர முயன்றதன் மூலம் (ஆர்.எஸ்.எஸ் காரான ஓ.பி.தியாகி என்ற ஜனதா எம்.பி. முன்மொழிந்த மசோதா) சிறுபான்மையினர் மத்தியில் தோன்றியிருந்த அவநம்பிக்கையைப் போக்க மதமாற்றத்தை அனுமதிக்கும் மசோதா ஒன்றை ஜூலை 1980-இல் ராம்ஜெத்மலானி முன்மொழிந்தார். ''எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' என்ற கதையாக அந்த மசோதாவை வழிமொழிந்தார் சிக்கந்தர்பக்த்.

வேறொரு வேடிக்கையும் நடந்தது. ஜாம்ஷெட்பூர் கலவரத்தைத் தூண்டியதாக குற்றம் சாட்டப்பட்ட தீனாநாத் பாண்டே என்ற பா.ஜ.க எம்.எல்.ஏ-வை உடனே தற்காலிக நீக்கம் செய்வதாக அறிவித்தது கட்சித் தலைமை!

இந்த மதச்சார்பின்மை நாடகம் ஒருபுறமிருக்க, அதன் தேசிய அரசியலோ விலைவாசி உயர்வு, இலஞ்ச ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றை மையப்படுத்தியே இருந்தது. இந்துத்துவம் பற்றிய பேச்சே இல்லை.

மொத்தத்தில் 1980 முதல் 1984 வரையிலான காலத்தில் தன்னை ஒரு மிதவாதக் கட்சியாகவும் வலது சாரியல்லாத கட்சியாகவும் சித்தரித்துக் கொள்ளவே பா.ஜ.க பெருமுயற்சி செய்தது. வேற்றுமையில் ஒற்றுமைதான் இந்தியக் கலாச்சாரத்தின் சிறப்பம்சம் என்றும், பல மதங்களைச் சேர்ந்த பல்வேறு மக்கட் பிரிவினர் இதற்குப் பங்களித்திருக்கிறார்கள் என்றும் கூறியது 1984–ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான பா.ஜ.க -வின் தேர்தல் அறிக்கை. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் காங்கிரசின் கொள்கைகளை பா.ஜ.க ரகசியமாகத் திருடிக் கொண்டது.

காங்கிரசோ ஆர்.எஸ்.எஸ்.-இன் கொள்கைகளைப் பகிரங்கமாகத் திருடியது. பாரதிய ஜனதா காந்திய சோசலிசம் பேசிக் கொண்டிருக்க, இந்திரா காந்தி ஐ.எம்.எஃப்-இடம் 5000 கோடி கடன்



படிப்பகம்

www.padippakam.com

வாங்கினார். சோசலிச வாய்ச்சவடால், இருபது அம்சம் போன்ற கவர்ச்சித் திட்டங்கள் கைகழுவப்பட்டு தாராளமயம் – காரிய சாத்தியவாதம் ஆகியவை இந்திராவால் முன்வைக்கப் பட்டன.

சோசலிசச் சவடாலுடன் மதச்சார் பின்மைச் சவடாலுக்கும் சேர்த்து விடை கொடுத்தது காங்கிரஸ். 1980 தேர்தலில் வெற்றி பெற்றவுடனே கோயில் கோயிலாகச் சென்று கும்பிட்டு விழுந்தார் இந்திரா. இந்நிகழ்ச்சிகள் திட்டமிட்டே மக்கள் மத்தியில் பிரபலமாக்கப்பட்டன.

பிந்திரன்வாலேயை ஒடுக்குவது என்ற பெயரில் சீக்கிய மக்கள் மேல் அரசு பயங்கரவாதத்தை ஏவி விட்டுக் கொண்டிருந்த இந்திரா, அதே தருணத்தில் ஆரிய சமாஜத்தின் கூட்டங்களில் கலந்து கொண்டு தன்னை ''இந்து''வாக அடையாளம் காட்டிக் கொண்டார்.

காங்கிரஸ் ஆட்சி செய்த மாநிலங்களில் முன்னெப்போதுமில்லாத அளவிற்கு முஸ்லிம்களுக்கெதிரான கலவரங்கள் அதிகரித்தன. 1980 – மொராதாபாத், 1981 – பீகார் ஷெரீப், 1982 – மீரட் என்று நூற்றுக்கணக்கான முசுலிம்கள் கொல்லப்பட்ட எல்லாக் கலவரங்களிலும் காங்கிரசு அரசும், போலீசும் இந்து வெறியர்களுக்கு ஆதரவாகவே இருந்தன.

1983 காசுமீர் சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில் காசுமீரி இந்துக்களுக்கு பருக் அப்துல்லா ஒரவஞ்சனை செய்வதாக இந்திரா குற்றம் சாட்டினார். காசுமீரி (ஜம்மு) இந்துக்களிடையே முசுலிம் எதிர்ப்புணர்வைத் தூண்டிவிட்டு இந்து வாக்கு வங்கியைக் கவர்ந்து கொண்டார். இதன் விளைவாக இந்தத் தேர்தலில் பாரதிய ஜனதாவுக்கு ஒரு இடம் கூடக் கிடைக்கவில்லை.

இத்தோல்வியைப் பற்றி பா.ஜ.க தலைவர் மல்கானி தெரிவித்த மதிப்பீடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ''பாரதிய ஜனதா வேட்பாளர்கள் அனைவரும் தோற்றிருக்கலாம். ஆனால் பாரதிய ஜனதாவின் கொள்கை வெற்றி பெற்றிருக்கிறது. நாற்காலிகளைக் காட்டிலும் கொள்கை முக்கியமானது.''

''நாற்காலி வேண்டுமென்றால் கொள்கைகளைத் தளர்த்திக் கொள்ள வேண்டும்'' என்ற அத்வானியின் கூற்றும் ''நாற்காலியைக் காட்டிலும் கொள்கை முக்கியமானது'' என்ற மல்கானியின் கூற்றும் தோற்றத்தில் மட்டுமே முரண்பட்டவை. சங்க பரிவாரத்தின் நடைமுறையில் இவை எந்த முரண்பாட்டையும் தோற்றுவிக்கவில்லை.

**''உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு'' என்பதைப் போல, இந்திராவின் ஆசியுடன் வளர்ந்து வந்த 'இந்து ஓட்டு வங்கி'யை பாரதிய ஜனதாக்கட்சி நாக்கில் நீர் ஊற மவுனமாகக் கவனித்துக் கொண்டிருந்தது.**



பாராளுமன்றத்தை உள்ளிருந்து கைப்பற்றுவதற்கும் வெளியிலிருந்து நிர்ப்பந்திப்பதற்கும் இரு வேறு உத்திகள் தேவைப்படுகின்றன என்பதை ஆர்.எஸ்.எஸ் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தது.

ஜனதா ஆட்சியில் மதமாற்றத் தடைச் சட்டத்தை நிறைவேற்ற இயலாமல் போனவுடனேயே இந்து வாக்கு வங்கியை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார் தேவரஸ். பா.ஜ.க மதச்சார்பின்மை பேசிக் கொண்டிருக்க, இந்து வாக்கு வங்கியை உருவாக்கும் பணிக்காக விசுவ இந்து பரிசத் தீவிரமாகக் களத்திலிறக்கிவிடப் பட்டது.

1981-இல் மீனாட்சிபுரத்தில் தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து தாழ்த்தப்பட்ட மக்கள் 1000 பேர் இசுலாமுக்கு மதம் மாறியவுடனே ''இந்து மதத்திற்கு ஆபத்து'' என்ற கூக்குரல் நாடெங்கும் கிளம்பியது. ''இப்படியே போனால் இந்தியாவிலேயே இந்துக்கள் சிறுபான்மையாகிவிடுவார்கள்'' என்று அபாயச் சங்கு ஊதின பத்திரிகைகள்.

''மோசடியான மதமாற்றங்களைத் தடுக்க மாநில அரசுகள் சட்டமியற்ற வேண்டும்'' என்று பேசினார் மத்திய உள்துறை அமைச்சர். அனைத்திந்திய அளவில் முஸ்லீம் எதிர்ப்புப் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தவும், தனது அடித்தளத்தை பரவலாக்கிக் கொள்ளவும் மீனாட்சிபுரத்தை ஏவுதளமாகப் பயன்படுத்திக் கொண்டது விசுவ இந்து பரிசத்.

1983-இல் விசுவ இந்து பரிசத் நாடு தழுவிய அளவில் நடத்திய **ஏகாத்மத** யாத்ராவில் (ஒருமைப்பாட்டு யாத்திரை) பல காங்கிரஸ்காரர்கள் பங்கேற்றுக் கொண்டனர். இந்த யாத்திரைக்கான பயணத் திட்டத்தை அன்றைய ஜனாதிபதி ஜெயில் சிங்கிடம் கொடுத்து ஆசி பெற்றதன் மூலம் காங்கிரஸ் அரசின் மறைமுகமான அங்கீகாரத்தையும் இந்த யாத்திரை பெற்றுக் கொண்டது.

இப்படியாக மீனாட்சிபுரம் மத மாற்றம் தேசியப் பிரச்சினையாக உருமாற்றம் செய்யப்பட்டது; தேசிய ஒருமைப்பாடோ இந்து மதத்தின் புனிதச் சடங்காக உருவாக்கம் பெற்றது.

''உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு'' என்பதைப் போல, இந்திராவின் ஆசியுடன் வளர்ந்து வந்த 'இந்து ஓட்டு வங்கி'யை பாரதிய ஜனதாக் கட்சி நாக்கில் நீர் ஊற மவுனமாகக் கவனித்துக் கொண்டிருந்தது.

காங்கிரசின் அரசியல் அணுகுமுறையில் ஏற்பட்ட இந்த மாற்றம், தயக்கத்துடன் ஒதுங்கியிருந்த பார்ப்பன இந்து வெறி அரசியலுக்கு தைரியத்தையும் அங்கீகாரத்தையும் வழங்கியது. காங்கிரசின் இந்த மாற்றத்துக்குத் தெளிவான பின்புலம் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அவசர நிலைக் காலத்தில் ரசிய சார்பு நிலையிலிருந்த இந்திரா அரசு மெல்ல அமெரிக்கச் சார்பு நிலைக்கு மாறத் தொடங்கியிருந்தது. ''இந்தியனாக இரு – இந்தியப் பொருட்களையே வாங்கு'' என்பன போன்ற அவசரநிலைக் காலத்து முழக்கங்களைக் கைகழுவிவிட்டு, தாராளமயம் என்ற திசை நோக்கித் திரும்புவதென்பது இந்தியத் தரகு முதலாளி வர்க்கத்தின் கோரிக்கையாகவும், இந்திய நடுத்தரவர்க்கத்தின் விருப்பமாகவும் இருந்தது.

சுயசார்பின் இடத்தைப் பிடித்துக் கொண்ட தாராளமயக் கொள்கை, சோசலிசச் சவடாலுக்குப் பதிலாகக் காரிய சாத்தியவாதத்தைத் (Pragmatism) தனது சித்தாந்தமாக முன் வைத்தது. எந்த நெறிகளுமற்ற (Amoral) இந்திரா காந்தியின் இந்தக் காரியசாத்தியவாதம், இந்து



பகல்பூர்: வயல்களில் வெட்டி வீசப்பட்ட முசுலீம் மக்களின் பிணங்கள்

வெறியைப் பயன்படுத்திக் கொள்வது குறித்துக் கடுகளவும் கூச்சப்படவில்லை. பொருளாதாரம் தாராளமயமாவதற்கும், அரசியல் காவிமயமாவதற்கும் (பாசிசமயமாவதற்கும்) இடையிலான இந்த உறவு தற்செயலானதல்ல.

●●●

எனினும் குஜராத்தைப் பொருத்த வரை இந்திராவின் 'இந்து மதவெறிச் சார்பு அரசியல்' அம்மாநில காங்கிரஸ் அரசுக்கு நேரடியான அரசியல் ஆதாயம் எதையும் அளிக்கவில்லை. இந்து தேசிய அரசியலை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் பார்ப்பன, பனியா, படேல் சாதிகளைச் சேர்ந்த பணக்கார வர்க்கங்களும், நடுத்தர வர்க்கமும் குஜராத்தில் ஜனதா மற்றும் பாரதிய ஜனதாவை ஆதரித்தன.

இருப்பினும், 1980 சட்டமன்றத் தேர்தலில் ஜனதா 22 இடங்களையும், பாரதிய ஜனதா 9 இடங்களையும் மட்டுமே பெற்றிருந்தன. **காம்** (KHAM) வாக்குவங்கியின் (சத்திரிய, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் முசுலீம்கள்) ஆதரவுடன் ஆட்சியைப் பிடித்திருந்த இந்திரா காங்கிரசோ மொத்தமுள்ள 182 இடங்களில் 140-ஐக் கைப்பற்றியிருந்தது.

காங்கிரசின் இந்த வெற்றிக்கு வேறொரு பொருள் இருந்தது. பார்ப்பன, பனியா, பட்டேல் சாதியினர் குஜராத்தில் முதன்முறையாக அரசியல் ஆதிக்கத்தைப் பறிகொடுத்திருந்தனர். அதிலும் குறிப்பாக, பொருளாதார ரீதியில் வலிமை அதிகரித்திருந்த சூழலில் இவர்கள் தமது அரசியல் செல்வாக்கை இழந்திருந்தனர்.

1970-களில் நில உச்சவரம்பையும், தானியக் கொள்முதல் சட்டத்தையும் முறியடித்திருந்த இந்த சாதிகளைச் சேர்ந்த பணக்கார விவசாயிகளும், வியாபாரிகளும் இந்தப் பத்தாண்டுகளில் தொழில் துறையிலும் முதலீடு செய்து முதலாளிகளாகத் தொடங்கியிருந்தனர். ''குஜராத்தைக் குட்டி ஜப்பான் ஆக்குவோம்'' என்று இவர்கள் முழங்கிக் கொண்டிருந்த நேரத்தில் தங்களைத் தாக்கிய இந்தத் தேர்தல் தோல்வியை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

காங்கிரசோ தனக்கு வெற்றி தேடித் தந்த காம் கூட்டணியின் சாதிகளுக்கு ஏதாவது செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தது. ஜனதா அரசால் முடக்கப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டத்தையும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தையும் காங்கிரசு மீண்டும் அறிமுகப்படுத்தியிருந்தால் அது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெரும்பான்மை மக்களான விவசாயிகளுக்கு ஓரளவு பயனளித்திருக்கும். ஆனால் அத்தகைய விருப்பமோ, திட்டமோ காங்கிரசு அரசுக்கு இல்லை.

எனவே காம் சாதிகளைச் சேர்ந்த நடுத்தரவர்க்கத்தினைத் திருப்திப்படுத்தும் வகையில் ஒரு அடையாள நடவடிக்கையாக மருத்துவக் கல்லூரி இட ஒதுக்கீட்டை முறைப்படுத்தும் முயற்சியில் இறங்கினார் காங்கிரசு முதல்வர் சோலங்கி.

குஜராத்தைப் பொருத்தவரை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 20 சதவீதம், பிற்படுத்தப்பட்டோருக்கு 5 சதவீதம் என்ற அளவிற்கு மட்டுமே இட ஒதுக்கீடு அமலில் இருந்தது. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்த 82 சாதிகளில் சில முஸ்லிம், கிறித்தவ சாதிகளும் அடக்கம்.

மாநிலத்தில் இருந்த 5 மருத்துவக் கல்லூரிகளுக்கும் சேர்த்து மொத்தம் 837 இடங்கள் இடஒதுக்கீடு செய்யப்பட்டதில் வெறும் 37 இடங்கள் மட்டுமே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தரப்பட்டிருந்தன. மீதமுள்ள 800 இடங்கள் 'மேல்' சாதியினரைக் கொண்டே நிரப்பப்பட்டன. இது 1978ம் ஆண்டின் புள்ளிவிவரம்.

இத்தகைய மோசடியை நிறுத்த வேண்டும் என்றும், நிரப்பப்படாத இடங்களை தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களைக் கொண்டுதான் நிரப்ப வேண்டும் என்றும் தெளிவான அரசு உத்தரவுகள் இருந்தும் அவை மீறப்பட்டன. இந்த முறைகேட்டை நிறுத்த முயன்றதுதான் சோலங்கி செய்த குற்றம்.

உடனே தொடங்கியது இட ஒதுக்கீட்டுக்கு எதிரான கலவரம். அகமதாபாத் பி.ஜே மருத்துவக் கல்லூரியில் கலவரம் தொடங்கிய சூழலைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார் குஜராத்தைச் சேர்ந்த சமூகவியலாளர் அச்யுத் யாக்னிக்:

''இதே மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து 3 நாட்கள் முன்புதான் ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞனின் பிணம் சவப்பரிசோதனை செய்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டது. அருகாமையி



படிப்பகம்

www.padippakam.com

லுள்ள ஜேதல்பூர் என்ற கிராமத்தின் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ் வளாகத்திலேயே வைத்து அந்த இளைஞனை எரித்துக் கொன்றிருந்தனர் படேல் சாதி நிலவுடமையாளர்கள். ஆனால் கலவரத்தைத் தொடங்கிய மேல்சாதி மாணவர்கள் இதைப்பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்கவில்லை; கடுகளவு கூட இரக்கப் படவுமில்லை.'' குஜராத்தின் பிரபலமான இந்துமனச்சாட்சியின் பதத்தை நிரூபிக்கும் ஒரு சோறு இது.

இடஓதுக்கீட்டு முறையைக் கறாராக்கப் படுத்தும் சோலங்கியின் அறிவிப்பை மட்டும் எதிர்ப்பதாகக் கூறி டிச–31ஆம் தேதி தொடங்கிய இந்தக் கலவரம் ஜனவரி–14ஆம் தேதி ''எல்லா இட ஒதுக்கீடுகளையும் ரத்து செய்'' என்றகோரிக்கையாக மாறியது.

எல்லாக் கல்லூரிகளிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மிரட்டப்பட்டனர், தாக்கப்பட்டனர். பேருந்துகள் எரிக்கப்பட்டன. ''தாழ்த்தப்பட்டவர்களுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் தரக்கூடாது, பால் விற்கக் கூடாது, வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது, கடைகளில் செய்தித் தாள்களைக் கூட அவர்களுக்கு விற்கக் கூடாது'' என்ற சமூகப் புறக்கணிப்பு ஆணைகளை படேல் நிலவுடமையாளர்கள் மாநிலமெங்கும் பிறப்பித்தனர். தாழ்த்தப்பட்டோருக்கு வீட்டு மனைகள் வழங்குவதை நிறுத்த வேண்டும் என்றும் அரசுக்குக் கோரிக்கை வைத்தனர்.

''எல்லா இடஒதுக்கீடுகளையும் ரத்து செய்'' என்ற கோரிக்கையை ஆதரித்து 'மேல்' சாதி அரசு ஊழியர்களும் வேலை நிறுத்தம் தொடங்கினர். இதில் பங்கேற்க மறுத்த தாழ்த்தப்பட்ட அலுவலர்கள் தாக்கப்பட்டனர்.

''அநியாய நிவாரண சமிதி'' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு அது காந்தி நகரில் இடஒதுக்கீடு எதிர்ப்பு மாநாடு நடத்தியது. சாத்திர சம்பிரதாயங்களுடன் பார்ப்பனப் புரோகிதரை வைத்து உருவாக்கப்பட்ட மாநாட்டு வளாகத்திற்கு ''சமத்துவ நகர்'' என்று பெயர் சூட்டினார்கள் சாதிவெறியர்கள்.

சமத்துவம், தகுதி, திறமை ஆகியவை இடஒதுக்கீட்டுக் கொள்கையால் பாதிக்கப்படுவதாக பத்திரிகைகள் ஒரே குரலில் பிரச்சாரம் செய்தன. இன்று குஜராத் படுகொலையின் போது ''இந்துக்களே எச்சரிக்கை! முஸ்லீம்கள் தாக்க வருகிறார்கள்'' என்று தலைப்புச் செய்தி வெளியிட்ட அதே குஜராத்தி பத்திரிகைகள், அன்று ''தாழ்த்தப்பட்டவர்கள் தாக்க வருகிறார்கள்'' என்று செய்தி வெளியிட்டன.

தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான சாதி வெறித் தாக்குதல்கள் கிராமப்புறங்களில் நடப்பதைத்தான் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் நவீன தொழில் நகரமொன்றில் - அகமதாபாத்தில் – இத்தகைய தாக்குதல் நடந்தது அநேகமாக குஜராத்தில் மட்டும் தான். அது மட்டுமல்ல, மாநிலத்தில் உள்ள 19 மாவட்டங்களில் 18 மாவட்டங்களுக்குப் பரவியது இந்த சாதி வெறித் தாக்குதல். இத்தகைய மாநிலம் தழுவிய சாதிக்கலவரம் இந்தியாவின் வேறெந்த மாநிலத்திலும் நடந்ததில்லை.

இந்தத் தாக்குதலை 'காம்' சாதியினர் எப்படி எதிர் கொண்டனர் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். ''எல்லா இடஒதுக்கீடுகளும் ஒழிக'' என்பது சாதி வெறியர்களின் முழக்கமாக இருந்தாலும், தாழ்த்தப்பட்டவர்களை மட்டுமே தாக்க வேண்டுமென்பதில் பார்ப்பன, பனியா,படேல் சாதிவெறியர்கள் கவனமாக இருந்தனர்.



பகல்பூர்: இந்து மதவெறியர்களால் இடிக்கப்பட்ட மசூதிகள்

முதலில் படேல்களுடன் சேர்ந்து கொண்டு தாழ்த்தப்பட்டோரைத் தாக்கிய இடை நிலைச் சாதியினர், பிறகு விவரம் நிந்தபின் ஒதுங்கிக் கொண்டனர். இருந்த போதிலும் 'காம்' கூட்டணியைச் சேர்ந்த சத்திரிய சாதியினர், தங்கள் சாதியைச் சேர்ந்த சோலங்கியின் ஆட்சியைக் கவிழ்க்க பார்ப்பன–பனியா–படேல் கூட்டணி நடத்தும் கலகமாகத்தான் இதைக் கருதினர். தங்களுடைய சாதிய கவுரவம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகத்தான் இதைக் கருதினரேயன்றி தாழ்த்தப்பட்ட மக்களின் கவுரவம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகக் கருதவில்லை.

எனவே, தாழ்த்தப்பட்ட மக்கள் களத்தில் தன்னந்தனியாகத்தான் இத்தாக்குதலை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. படைபலமும் ஆள்பலமும் அதிகார பலமும் கொண்ட சாதி ஆதிக்கவாதிகளைத் திருப்பித் தாக்குவதென்பது அவர்களுடைய சக்திக்கு மீறியதாக இருந்தது.

''பிணம் எரிப்பது, மலம் அள்ளுவது போன்ற அடிமைத் தொழில்களைச் செய்ய மாட்டோம்'' என்று போராடிய பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் எரித்துக் கொல்லப்பட்டனர். தாக்குதலையும் சமூகப் புறக்கணிப்பையும் எதிர் கொள்ள முடியாமல் பலர் நகர்ப்புறங்களுக்குக் குடிபெயர்ந்தனர்.

இன்று குஜராத் முசுலீம்கள் படுகொலையின் போது சபர்மதி ஆசிரமத்தைப் பூட்டிக் கொண்ட காந்தியவாதிகள், அன்றும் அதையேதான் செய்தனர்; கண்டுகொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டனர்.

காந்தியம், இந்து மதம் ஆகியவற்றின் மீதான தமது வெறுப்பை வெளியிடும் விதத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறும் நிகழ்ச்சிகளும் நடந்தன.

1981 பிப்ரவரியில் மீனாட்சிபுரம் மத மாற்றம் நடந்தது; அதே நேரத்தில் (மார்ச் மாதத்தில்) அகமதாபாத் நகரில் மட்டும் 700 தலித் குடும்பங்கள் புத்தமதத்திற்கு மாறினர்.

எதிர்ப்புப் போராட்டங்களும் நடக்காமலில்லை. குஜராத்தில் இன்று பழங்குடி மக்களைப் பயன்படுத்தி விசுவ இந்து பரிசத் முசுலீம் மக்கள் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறதே, அந்த சபர்கந்தா மாவட்டத்தில் அன்று எதிர்ப்புப் பேரணி நடந்தது. பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர்,



படிப்பகம்

www.padippakam.com

**எல்லாக் கல்லூரிகளிலும் தாழ்த்தப் பட்ட மாணவர்கள் மிரட்டப்பட்டனர், தாக்கப்பட்டனர். பேருந்துகள் எரிக்கப் பட்டன. "தாழ்த்தப்பட்டவர்களுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் தரக் கூடாது, பால் விற்கக் கூடாது, வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது, கடைகளில் செய்தித் தாள்களைக் கூட அவர்க ளுக்கு விற்கக் கூடாது" என்ற சமூகப் புறக்கணிப்பு ஆணைகளை படேல் நிலவுடமையாளர்கள் மாநில மெங்கும் பிறப்பித்தனர்.**

பிற்படுத்தப்பட்டோர் இணைந்து நடத் திய இந்த பேரணியில் 10,000 பேர் பங்கேற்றனர்.

இத்தகைய எதிர்ப்புப் போராட் டங்கள் எதுவும் நடக்கக்கூடாது என்பதில் காங்கிரசு அரசு கவனமாக இருந்தது. தனது வாக்கு வங்கியாகப் பயன்பட்ட **காம்** சாதியினர் வரம்புமீறிக் களத்தில் இறங்கிவிட்டால் அதன் விளைவாகத் தோன்றக்கூடிய 'சமூக நிலை குலைவை' எண்ணி காங்கிரஸ் அரசு அஞ்சியது. அத்தகைய 'நிலைகுலைவை' ஏற்படுத்து வோரைக் கைது செய்தது.

பார்ப்பன பனியா கும்பலைப் போர்க் குணத்துடன் எதிர்த்து தமது பத்திரி கையில் எழுதிய தலித் பாந்தர் அமைப்பின் கவிஞர்களையும், புரட்சிக் கவிஞன் செரபண்டராஜுவின் கவி தையை வெளியிட்ட 5 பிற சாதி கவிஞர் களையும் சிறைவைத்து 'சமூக நல்லிணக் கத்தைக் குலைப்பதாக' வழக்கு தொடர்ந் தது காங்கிரஸ் அரசு.

மூன்று மாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்த இந்தக் கலவரத்தின் முடிவில் காங்கிரஸ் அரசு சரணடைந்தது. ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் நிரப்பப்படாத போது அவை பொதுப் பட்டியலுக்கு மாற்றப்படும் என்றும், இடஒதுக்கீடு கார ணமாக மேல்சாதி மாணவர்கள் 'இழந்த' இடங்களை ஈடு செய்ய கூடுதல் இடங்கள் ஒதுக்கப்படுமென்றும், மாதம் 150 ரூபாய் உதவித் தொகை தரப்படு மென்றும் வாக்குறுதியளித்தார் முதல்வர் சோலங்கி.

"ஆண்டுக்கு 5 சதவீதம் என்ற கணக்கில் இடஒதுக்கீட்டை படிப்படி யாகக் குறைத்து 5 ஆண்டுகளில் இட ஒதுக்கீட்டையே ரத்து செய்ய வேண்டும்" என்று கோரினர் சாதி வெறியர்கள்.

"இட ஒதுக்கீட்டைத் தொடர்வது தவிர்க்கவியலாததாக இருக்கிறதென்றும், தகுதியுள்ள மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் களைய முயற்சிப்பதாகவும்" சாதிவெறியர்களுக்கு ஆறுதல் சொன்னார் இந்திரா காந்தி.

1970-களின் துவக்கத்தில் நவ நிர்மாண் இயக்கத்தின் மூலம் எல்லா சீர்தி ருத்தச் சட்டங்களையும் முறியடித்த பார்ப்பன–பனியா–படேல் கூட்டணி 1980–களின் துவக்கத்திலும் வெற்றி பெற்று விட்டது. 70-களில் தந்தையர், 80-களில் தனயர்கள்!

இந்தக் கலவரத்தில் எதிர்க்கட்சி களின் பங்கு என்ன? ஜனதா, பாரதிய ஜனதா, லோக்தள் போன்ற கட்சிகள் கல வரத்தை மறைமுகமாகத் தூண்டிவிட்டன. அதே நேரத்தில் தாங்கள் இடஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்க்கவில்லையென்றும் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க சோலங்கி அரசுக்குத் தெரியவில்லை என்றும் குற்றம் சாட்டினர்.

முன்னாள் முதல்வரும், 70 பினாமி கல்லூரிகளின் உண்மையான முதலாளியு மான சிமன்பாய் படேல், எண்ணெய் வியாபாரிகளின் தலைவனும், பா.ஜ.க எம்.எல்.ஏ.வுமான வல்லபாய் படேல் ஆகியோர் கலவரத்தைப் பகிரங்கமாக ஆதரித்தனர். ஏ.பி.வி.பி (ஆர்.எஸ்.எஸ். -இன் மாணவர் அமைப்பு) கலவரத்தில் நேரடிப் பங்காற்றியது.

மேற்கூறிய காரணங்களால், சாதி வெறியர்கள் அடைந்த இந்த வெற்றியின் 'பெருமை' முழுவதையும் நாம் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு வழங்கிவிட முடி யாது.

பார்ப்பன–பனியா–படேல் சாதி ஆதிக்கக் கும்பலிடம் இயல்பாகவே கொப்பளித்துக் கொண்டிருந்த சாதி வெறி; பணக்கார விவசாயிகள், வர்த்தக சூதாடிகள், நடுத்தர வர்க்கத்தினர் என்ற முறையில் குஜராத் சமூக அமைப்பில் வர்க்க ரீதியாக அவர்கள் அனுபவித்து வந்த ஆதாயங்கள் – இவையிரண்டையும் சீண்டுகின்ற எந்த நடவடிக்கையையும் அவர்கள் வெறி கொண்டு எதிர்த்தனர்.

70-களின் துவக்கத்தில் நிலச்சீர் திருத்த எதிர்ப்பு, குத்தகைதாரர் பாது காப்பு சட்ட எதிர்ப்பு, அரசுக் கொள்முதல் எதிர்ப்பு – என வர்க்க ரீதியாக அது வெளிப்பட்டது, 80-களின் துவக்கத் திலோ 'இடஒதுக்கீடு எதிர்ப்பு' எனச் சாதி ரீதியாக அது வெளிப்பட்டிருக்கிறது.

ஆளும் வர்க்க நலனையும், ஆதிக்க சாதி நலனையும் 'இந்து மதவெறிப் பாசிசம்' என்ற ஒரே அரசியல் சட்டகத் திற்குள் இணைக்கும் பணி மட்டும்தான் பாரதிய ஜனதாவிற்கு விட்டு வைக்கப்பட் டிருந்தது. "வா... இங்கே சோதனை செய்துபார்" என்று இந்துத்துவத்தை அழைத்தது சோதனைச்சாலை.

— தொடரும்


## நூல் அறிமுகம்




★ இலங்கைப் பிரச்சினையின் பின்னணி என்ன?

★ வர்க்க ரீதியான, இனரீதியான, சாதிய ரீதியான போக்குகள்

★ மலையக மக்களின் இழிநிலை

★ உலகமயத்தின் கீழ் இலங்கை

இப்படி இலங்கைப் பிரச்சினையின் அரசியல் வரலாற்றை விவரிக்கும் ஒரு நூல்

**இலங்கை: யுத்தத்தின் பரிணாமமும் உலகமயமாக்கலின் படையெடுப்பும்**

பக்கம்: 120 விலை: ரூ. 40.00

*வெளியீடு: சமர், பிரான்சு*

*நூல் கிடைக்குமிடம்:*
கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.

*அஞ்சலில் நூல் வேண்டுவோர் நூலின் விலையுடன் ரூ. 16.00 சேர்த்து M.O. செய்யவும்!*




படிப்பகம்

www.padippakam.com

# வீணும்

● துரை. சண்முகம்

''என்னம்மா பச்ச புள்ள பாவாட தாவணி கட்டுன கதையா எல்லாம் வெளையாட்டுத்தனமா கெடக்கு, செவுரு ஒரு பக்கம் பூசியிருக்கு, ஒரு பக்கம் பூசாம கெடக்கு. வர்றது அய்ப்பசி மாசம், வெளிச்செவுரெல்லாம் இப்படி பல்லக் காட்டிட்டு நிக்குதே... சாரல்பட்டு, பட்டு ஓதங் காத்துப் போயிரும்மா! நீயாவது மாப்பிள்ளகிட்ட சொல்றது இல்ல?''

''லீவு கெடைக்குறப்ப ஒவ்வொரு மூட்டையயாவது வாங்கிப் பூசுங்கன்னு சொல்லிச் சொல்லி அலுத்துப் போச்சுப்பா! பூசுனா மொத்தமாப் பூசணும்னு சொல்லியே அஞ்சு வருசம் ஓடிப் போச்சு.''

முகத்தைக் கழுவிக் கொண்டுவந்த சுந்தரமூர்த்தி விசயம் புரிந்து சிரித்தபடி வந்தான் ''என்ன மாமா ஆரம்பிச்சிட்டாளா! உப்பு, புளி மொளகா கதைன்னு நெனைக்குறா. இப்ப இருக்குற வெலவாசில்ல அதையே தெனம் வாங்க முடியல, இதுல ஒவ்வொரு மூட்டையா பூசுறதாம். வெளிச்செவுரு முழுக்கப் பூசணும்னு கைய வச்சா, கொறச்சலா இருபதாயிரம் ஆகும். எங்க போறது? எல்லா லோனையும் போட்டுத்தான் இந்த இடத்தையே வாங்குனது. கடக்கால் போட்டுக் கட்டுறதுக்குள்ள பொழப்பே ஆடிப் போச்சு போங்க!''

''எனக்குத் தெரியாதா! எடத்த வாங்கியே ஆறு வருஷம் கட்டாமல்ல கெடந்துச்சு. டவுன விட்டு இவ்வளவு தூரம் புறநகர்ல இருந்தும் எடம் இந்த விலை விக்குதே!''

''மாமா நாம வாங்குனப்ப ஈசியா பத்தாயிரத்துல கெடைச்சது. இப்ப இங்க சதுர அடி பத்தாயிரம் போகுது. இதுல மெட்ராஸ் சிட்டிக்குள்ள நாமெல்லாம் நெருங்கவே முடியாது. இன்னும் பத்து வருசத்ல பாருங்க ஜெயலலிதா, கருணாநிதி, பெரும்புள்ளிங்களத் தவிர யாரும் மெட்ராஸ்லயே இருக்க முடியாது''.

''வாங்கி வீடு கட்டுன வரைக்கும் சரிதான், இருந்தாலும் வருசக்கணக்குல வெளிச்செவுரு பூசாம இருக்கறது என்னவோ மாதிரி இருக்கு மாப்பிள? தயங்கியபடியே சொன்னார்.

''என்ன பண்றது எனக்கும் ஆசதான் முன்னபோல லீவும் கெடையாது, கம்பெனியும் லே ஆஃப் கொடுத்துட்டான். அது வேற பயமா இருக்கு. எப்ப வீட்டுக்கு அனுப்பப் போறானோ! பாருங்க முன்ன மாதிரி ரெகுலர் ஷிப்டு கடையாது. நைட்டு போயி காலைல வர்றேன்.''

''ஆமாம், ஆமாம் வெத்தலைக்கு கொஞ்சம் கூட சுண்ணாம்பு கேட்டாலே என்ன வீட்டுக்கு வெள்ளையடிக்கவா போறீங்கன்னு இழுத்துப் புடிக்குற ஊரு இது. சரி,சரி மொதல்ல வவுத்தப் பாருங்க. அப்புறம் செவுத்த பார்க்கலாம்.''

''அதுக்குத்தான் மாமா, ஊர்ல இருக்குற அந்த எடத்த வித்துரலாம்னா இவ கேக்க மாட்டேங்குறா!''

ஆமாம், அங்க பெரிய அய்வேசு பண்டாரவடை இருக்குல்ல, வண்டி மாடு அவுத்துப்போடுற அளவுக்கு இத்துணூண்டு எடங்கெடக்கு. அது இவுரு கண்ண உறுத்துது. வித்தரணும் வித்தரணும்னு குதிக்கிறாரு. சொந்த ஊர்ல ஒரு துண்டு எடமிருந்தாதான் நாளைக்கு நமக்கு நல்லது.''

''ஓ! அதுவாம்மா அந்த எடம் ஆறாயிரம் போனா பெரிசு மாப்பிள. கிராமத்ல எவன் வாங்குறான். அதுவும் இப்ப வாய் காஞ்ச நேரம். அத விடுங்க மாப்புள. அடுத்த வருஷம் ஆத்துல தண்ணிவந்து அரசாங்கம் நெல்ல வாங்குனா பாத்துக்கலாம், கிராமத்துல மட்டும் என்ன கிழிக்குது. அவனவன் பண்ணையார் மாதிரி பந்தாவா வெத்தலைப் போட்டுகிட்டு கடைத் தெருவுல நிக்கிறானேன்னு பாக்குறீங்களா? எல்லாம் பசி மரத்துப் போகத்தான்.''

''சுந்தரமூர்த்தி, ஹலோ மூர்த்தி சார்!'' குரல் கேட்டு வாசல் பக்கம் எட்டிப்பார்த்த சுந்தரமூர்த்தி ''ஆங்! வாங்க வாங்க என்று மகிழ்ச்சியில் திடுக்கிட்டான்.

''என்ன சார், பிஸியா? டிஸ்டர்ப் பண்ணிட்டோமா, கொஞ்சம் இப்படி வர்றேளா, ஒருசேதி இருக்கு!'' - அய்யர் குரல் உருகி வழிந்தது.

எந்த மறுப்பும் இல்லாமல் சுந்தரமூர்த்தி பாய்ந்து சென்றான். பார்த்துக் கொண்டிருந்த ராணிக்கு எரிச்சல் மேலிட்டது.

''வந்துட்டானுங்க நோட்ட ஒண்ணு தூக்கிட்டு''

''யாரும்மா அது, மாப்பிள பாஞ்சிட்டு ஓடுறாரு''?

''இந்த அய்யிருங்களுக்கு இதே வேலெ. ஏதாவது கோயில் விசேசம்னு மாசாமாசம் வரி போலக் காசு கேப்பாங்க. இவுரு பாஞ்சிட்டுபோய் தலை யாட்டுவாரு. அப்புறம் நகர்சங்கம் அது இதுன்னு அதுக்கு வேற தனியா! ஏண்டா நகர்ல எடத்த வாங்குனோம்னு இருக்கு''

''ஓஹோ! கிராமத்லதான் தலக்கட்டு, அடிக்கட்டுன்னு தாலியறுப்பானுவ. இங்கேயும் இதே கதிதானா? இருக்குற இடைஞ்சல்ல வாழப்பழமே தோல் நகுங்குதாம், இதுல தக்காளி தாண்டி குதிச்ச கதையால்ல இருக்கு? இவுருக்கு ஏன் இந்த சங்காத்தமெல்லாம். சொன்னாலும் கேக்க மாட்டாரு. நீ போய்ப் புள்ளைங்களுக்குச் சோற தயார் பண்ணு, நாளைக்காவது நான் ஊருக்குக் கெளம்புறேன்.''

''ஊருக்கு ஊருக்குன்னு பறப்பீங்கப்பா. அங்க என்னா இப்ப வேலையா கெடக்கு, பேசாம கெடங்க''

''நீவேறம்மா ஊருக்குப் போனாலாவது ரெண்டு கீத்து மொடஞ்சாலும் உடம்பு நோவாம இருக்கும், இங்க எவன் விட்டத்த பாத்துட்டு வெறுமனே உட்கார்ந்து கெடக்குறது?'' ராணி தனக்குத்தானே சிரித்துக் கொண்டு அப்பாவைப் பார்த்து ''கேக்கவே மாட்டிங்கப்பா'' என்று முனகிக் கொண்டாள்.

●○●

''என்ன போங்கோ! சுந்தரமூர்த்தி நாயனாரைக்கூட வரவழச்சுப் பார்த்துடலாம் போல சுந்தர மூர்த்திய தரிசிக்க முடியல்ல!'' பலமாகச்சிரித்தார் வெங்கட்ராமய்யர்.

லேசாக வெட்கப்பட்ட சுந்தரமூர்த்தி ''இல்லசார்! இப்பெல்லாம் நைட் ஷிப்ட், அதான் வந்தா அசதியில படுத்துர்றது. கூப்புட்டீங்களாமே, ராமமூர்த்தி சார் வந்து சொன்னாங்க!'' என்றான்.

''நான் எங்க கூப்புடறேன். ஸ்ரீ சுந்தர விநாயகர்ல உங்களக் கூப்ட்டு அனுப்பிச்சிருக்கார்'' வெங்கட்ராமய்யர் பீடிகை போட, ரமணி தொடர்ந்தார் ''பார்த்தேளா வெங்கட்ராமன்! விநாயகர் கூட சாட்சாத் நம்ப சுந்தரமூர்த்தி போலயே பிரதிஷ்டை ஆயிருக்கிறார்'' சிரித்துக் கொண்டே பூணுலை முன்னும் பின்னும் அசைத்துக் கொண்டார்.

''வேற ஒண்ணுமில்ல! நம்ம நகர்ல கோயில்கட்ட இடம் ஒதுக்கி, சுவர் வரைக்கும் எழுப்பி வேல பாதிலேயே நின்னுடுத்து பாருங்கோ! அதுக்கு விடிவு காலம் பொறந்திருக்கு, பெரியவா அனுக்



படிப்பகம்

www.padippakam.com

கிரகத்துல மேக்கொண்டு வேலைக்கும் ஏற்பாடாயிருக்கு. மளமளன்னு வேலையத் தொடங்கி பதினைஞ்சு நாள்ல வேல முடிச்சாகணும். கும்பாபிஷேகத்துக்கு டேட் கூட வாங்கியாச்சு, நகர்ல ஆளுக்கு ஒரு பொறுப்ப எடுத்துண்டிருக்கா. நீங்களும் நகர்ல ஒரு முக்யஸ்தராச்சே, உங்களவா பொறுப்பையும் நாங்க மறுக்க முடியுமா! அதனால உங்களுக்கும் அந்த பாக்கியத்தைத் தரணும்னு தெய்வ சங்கல்பம். அது விஷயமாத்தான் கூப்ட்டேன்.'' கனைத்துக் கொண்டார் வெங்கட்ராமய்யர்.

''பின்னே! சார் இல்லாம நம்ப பிள்ளையார் கோயிலே ஸ்தாபிதம் ஆயிருக்குமா? சுத்துச் சுவர் எழுப்புற வரைக்கும் எத்தனை நாள் லீவு போட்டுட்டு வேல பார்த்தார்? சார் இல்லேன்னா ஒரு வேலையும் ஆயிருக்காது மாமா''

ராமமூர்த்தியின் புகழ்ச்சியில் சங்கடப்பட்டுப் போனான் சுந்தரமூர்த்தி.

''நேக்குத் தெரியாதா! நம்மளவாள விட சுந்தர மூர்த்திக்குத்தான் விநாயகர் அனுக்கிரகம் ஜாஸ்தி. அவ்ளோ வேல பார்த்திருக்கார் - ஒண்ணுமில்ல சுந்தர மூர்த்தி, ஒரு பத்து நாளைக்கு தெனமும் கோயிலாண்ட வந்துடுங்கோ. சிமெண்டு, ஜல்லி, கல்லெல்லாம் வந்து எறங்கறது. உடையவா இல்லேன்னா உருப்படியாவுமோ! பெரிசா வேல ஒண்ணுமில்ல, கொஞ்சம் கூட இருந்து பாத்துக்குங்கோ, ரமணி ராமமூர்த்தியும் கூட இருப்பன். இருந்தாலும் ரெண்டும் அசடுகள், அவ்ளோ வெவரம் பத்தாது, கொஞ்சம் நீங்க இருந்து உங்க காரியமா எடுத்துச் செய்ங்கோ! நீங்க இல்லாம திருப்பணியான்னு நேக்குபட்டது. தப்பில்லையே!''

பட படவென்று செங்கல்லை கட்டாயம் போட்டது மாதிரி சுந்தர மூர்த்தியைச் சுற்றி வார்த்தைகளை அடுக்கினார் வெங்கட்ராமய்யர்.

''அட என்னங்க சார்! பெறத்தியார் கிட்ட பேசுற மாதிரி... நம்ப நகர் வேலை. ஆளுக்கு ஒன்னா பாத்துட்டுப் போறோம்'' உரிமையுடன் பேசினான் சுந்தர மூர்த்தி.

''வெங்கட்ராமன், புராண காலத்லேயே பகவான் பக்கத்ல இருந்து சேவிச்சு, பூஜை, புனஸ்காரம் பண்ண நம்மளவாள விட கண்ணப்ப நாயனார் மாதிரி திருத்தொண்டர்களுக்குத்தான் ஒய் பகவான் அருள் பாலிச்சிருக்கார். அவா, அவா செய்யற திருப்பணிய நாம யார் தடுக்கறதுக்கு?'' என்று குறுக்கிட்டார் ரமணி.

''அப்புறம் சுந்தரமூர்த்திசார்! போன மாசம் நகர் சங்கத்துல பேசி முடிவெடுத்த படிக்கு வீட்டுக்கு ரெண்டாயிரத்துல உங்க பங்கு பாக்கி நிக்கறது. ஹி...ஹி... சீக்கிரம் தந்துட்டேள்னா கும்பாபிஷேக வேலைக்கு உதவும். அதையும் செத்தப் பாருங்கோ...''

சுந்தரமூரத்தி யோசிக்க ஆரம்பிக்க ''என்ன சிரமம் தந்துட்டமோ!'' என்று நயந்தார் வெங்கட்ராமய்யர்.

''அதுக்கில்ல சார் சாமி காரியத்துக்கு என்ன சார் கணக்கு! மாசக்கடைசி, பரவாயில்ல தந்துடறேன். அப்புறம் கோயில் எலக்ட்ரிக்கல் வேல இருந்தா. நம்ப தம்பி ஒருத்தன் வேலை செய்வான் அதான் கேக்கலாம்னு..'' தயங்கினான்.

''அட என்னப்போங்கோ சுந்தர மூர்த்தி! விசயத்த முன்னமே சொல்லப்படாதோ! அண்டை அசலாரண்ட கொடுத்தா சரியாவராதுண்ணு, தெரிஞ்சவா இருந்தா தேவலாம்னு கடைசில நம்ப ரமணி தம்பி அம்பி எலக்ட்ரிகல் படிச்சிட்டு இருக்கான்னு கேள்விப்பட்டு அவன வச்சில்ல முடிச்சிட்டோம். எங்களாண்ட முன்கூட்டியே சொல்லப்படாதோ, மனசு கஷ்டமா இருக்கு. இந்தக் கம்மனாட்டிகளும் சொல்லித் தொலைக்கல, சொல்லப்படாதோ, நீங்களாவது. நாங்க என்ன பிறத்தியாளா? நம்ப பையன விட்டாச்சே! போங்கோ!''

''சார்! சார்! இதப் பெரிசா எடுத்துக்காதீங்க. நான் எதேச்சையாத்தான் கேட்டேன். தப்பா எடுத்துக்காதீங்க'' வெங்கட்ராமய்யரின் நல்ல மனதை நோகடித்துவிட்டோமோ எனச் சுந்தர மூர்த்தி நொந்து கொண்டான்.





படிப்பகம்

www.padippakam.com

''அதுக்கில்ல இது பொதுக் காரியம், நாலு பேரையும் கலந்துண்டு செய்யறது தானே உத்தமம். நீங்க ஏதும் மனசுல வச்சுக்காதீங்கோ... இனிமே வேற வேல வராமலா போகப் போறது. நெக்ஸ்ட் டைம் யுவர் சாய்ஸ்தான். அப்புறம்... போய் லஞ்ச்ச முடிங்கோ. நாளைலேர்ந்து கோயில் வேலையைப் பாருங்கோ, ஒங்க கோயில்! ஒங்க பொறுப்பு! வேறென்ன''

வெங்கட்ராமய்யர் பேச்சில் ரசித்தது போல மௌனமாகச் சிரித்தபடி விடை பெற்றான் சுந்தரமூர்த்தி.

●○●

''என்ன சுந்தர மூர்த்தி ஒரு மாதிரி டல்லா வர்றேள்''

''ஒண்ணுமில்ல சார் பத்துநாளா நைட்ஷிப்ட் முடிஞ்சு வீட்டுக்கு வந்த கையோட இங்க வந்துடறேனா, வீட்ல கொஞ்சம் படுத்துத் தூங்கிட்டுப் போனா என்னன்னு. பிரச்சினை. புரிய வக்கிறதுக் குள்ள பெரும்பாடா இருக்கு?''

''நாழியாறதே என்னடா ஆளக் காணோமேன்னு நெனச்சிண்டே இருந்தேன். டேட்ட வேற கிட்ட வச்சிட்டம். இன்னும் மேல்பூச்சு வேல வேற பாக்கி இருக்கே! நீங்க இல்லேன்னா ஒரு வேலை ஆகுமோ?'' ரமணி அய்யர் பேச்சை வேறு பக்கம் இழுத்தார்.

''நைட்டு முழுக்க மிஷன்கிட்டயே நிக்கிறேனா, கண்ணு பொங்குது சார்! கும்பாபிஷேகம் முடிச்சிட்டுத்தான் உடம்பைக் கவனிக்கணும்'' சுந்தரமூர்த்தி கைகளை உதறியபடியே சுண்ணாம்பு சாக்கைத் தூக்கிக் குவளைக்குள் கொட்டிக் கொண்டே பேசினான். ரமணி வேறு ஞாபகம் வந்தவர் போல ''ஏம்பா அவ சர அவசரமா கல்ல எறக்கிவச்சு டாப்புல பூசியாச்சே. நன்னா பார்த்தேளா! சோட இல்லாம இருந்துச்சில்ல.'' என்றார் அக்க றையாக.

''என்னங்க இப்ப வந்து கேக்குறீங்க! எல்லாம் பதமான கல்லுல்ல. நானே நேர்ல போயில்ல லோடு ஏத்திக்கிட்டு வந்தேன். கட்டாயம் போட்டுக் கெடந்தப் பவே பாக்குல, சும்மா அறுத்த கோழி மாதிரி செவசெவன்ல இருந்துச்சு'' தன்னையறியாமல் இயல்பாய்ப் பேசிக் கொண்டு போன சுந்தரமூர்த்தி ரமணி அய்யரின் முகம் சலனமற்று இருப்பதைப் பார்த்தவுடன் ''ஸாரி சார்! நான் வேற கோழி, கீழின்னு பேசி... உங்களுக்கு என்னமோ மாதிரி இருக்கும்'' என்றான் கவனமாக.

''என்னமோப்பா அப்படியே பழ கிட்டோம்'' என்று சுருக்கமாக முடித்தார் ரமணி. வர்ணம் பூசிக்கொண்டே இதை

**''நைட்டு முழுக்க மிஷன்கிட் டயே நிக்கிறேனா. கண்ணு பொங்குது சார்! கும்பாபி ஷேகம் முடிச்சிட்டுத்தான் உடம்பைக் கவனிக்கணும்'' சுந்தரமூர்த்தி கைகளை உதறியபடியே சுண்ணாம்பு சாக்கைத் தூக்கிக் குவ ளைக்குள் கொட்டிக் கொண்டே பேசினான்.**

வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பெயிண்டர் ''ஏன் சாமி வருஷம் முன்னூத்து அறுவத்தஞ்சு நாளும் எப்ப டித்தான் இந்த தயிர் கவுச்சியத் தாங்கிக்கு றீங்க'' என்றார் சத்தமாக.

''ஏய் உனக்கு, தயிரு கவுச்சி அடிக் குதா! ஏண்டா நோக்கு அடிக்காது, சாராயம் நோக்கு மணக்கும்.'' ரமணி அய்யர் முகம் சிவந்து உதடு கோணியது.

''ஏய் பேசாம உன் வேலையப்பாரு உனக்கு ஏன்ய்யா அதிகப்பிரசங்கித்த னமா?'' சுந்தரமூர்த்தி மூஞ்சியைக் காட்ட பெயிண்டர் புன்னகைத்தவாறு வேலையைத் தொடர்ந்தார். ஒரு நிமிடம் அங்கு அமைதி நிலவியது.

''என்னன்னா செத்த இப்பிடி வந்துட்டுப் போங்கோ!'' தெருப் பக்கம் குரல் கேட்க ரமணி அய்யர் இளைப் பாறிய கண்களைத் திறந்தார்.

''சுந்தர மூர்த்தி! கவர்னர் அழைப்பு வந்துடுத்து, தட்டமுடியாது பாத்துட்டு வந்துடறேன். வேலயப் பாத்துக்குங்கோ, நான் வந்தோன்ன போகலாம். யப்பா ஈஸ்வரா, விநாயகா...'' நாற்காலியிலி ருந்து நிதானித்து எழுந்தவர் வீட்டுப் பக்கம் கிளம்பினார்.

மணல் திட்டில் கல்லு பொறுக்கி போட்டுக் கொண்டிருந்த சுந்தரமூர்த் தியைக் கூப்பிட்ட பெயிண்டர். ''சார் எதுக்குக் கூப்டாங்க தெரியும்ல ஊம்.. ஊம்..'' என்று சாப்பிடுவது போல சைகை காட்டினான்.

''உங்க வீட்லயும், எங்க வீட்லயும் வந்து கூப்புடுவாங்களா? நம்மளா போனாதான் உண்டு. அவுங்க அவுங்க சுதான். ஏன் சார் நானும் பத்துநாளா பாக்குறேன் இடுப்பெலும்பு முறிய வேல பார்த்து இங்கேயே அடுகடையா கெடக் குறீங்க... எவ்வளவு சார் ஒரு நாளைக்கு உங்களுக்கு?''

''ஏய் நானும் ஆரம்பத்லேர்ந்து பாக்குறேன், ஏடா கூடமா பேசிகிட்டே இருக்கே. ஒழுங்கா வேலையைப் பாக்கு றியா, இல்ல வீட்டுக்கு போவணுமா? பேசாம வேலையப்பாரு'' என்று கோபமாய் சுந்தரமூர்த்தி விளாச, பெயிண்டர் பின்னந்தலையைச் சொறிந்த படி பிரஷ்ஷை உதற ஆரம்பித்தார்.

மணி மூன்றைத் தாண்ட, ரமணி அய்யர் வராததால் அவரின் வீட்டுப் பக்கம் போனான் சுந்தரமூர்த்தி. உஷா மின்விசிறி மண்டையை மண்டையை ஆட்ட கட்டிலில் ரமணி அய்யரின் வயிறு ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. ''ஒரு மனுசன தூக்கத்துல எழுப்பறது மகா பாவம்'' என்ற ரமணி அய்யரின் பிர சங்கம் நினைவுக்கு வர திரும்பி கோயில் பக்கம் வந்துவிட்டான்.

●○●

மணி மூணே முக்கால் இருக்கும். கோயில் அருகே வந்தவுடன் ரமணி அய்யரின் நடை வேகம் காட்டியது. ''போய் சாப்ட்டேனோ, இல்லையோ அப்படியே ஆளக் கொண்டு அசத்தி டுத்து. மாமி வந்து காபிக்கு எழுப்புறச் சதான் திடுக்குன்னு முழிச்சு, காபியக்கூட குடிக்கல ஓடிவந்துட்டேன். என்ன பெருமா கோயில் பக்தர் கணக்கா நெத்தில குறியெல்லாம்.. ஹெ... ஹெ.....''

சுவற்றில் பூசிக்கொண்டிருந்த காவி நெற்றியில் ஒட்டியதைக் கைலியைத் தூக்கி துடைத்துக்கொண்ட சுந்தரமூர்த்தி ''பெயிண்டரும் சாப்பிடப் போயிட்டான் ஆளுங்கள எதிர்பார்த்தா நாளைக்குக் கும்பாபிஷேகத்துக்குள்ள வேலை முடி யுமா. அதான் பிரஷ்ஷப் புடிச்சுட்டேன். எப்படியிருக்கு?'' வேலையின் அக்க றையில் பசியை மறந்திருந்தான்.

''நோக்கு என்னப்பா! எல்லாத்லேயும் எக்ஸ்பர்ட்தான். உங்க கை பட்டுத்தானே கும்பாபிஷேகமே முடிய வேண்டியி ருக்கு! சரி,சரி மணியாச்சு போய் சாப்புட்டுட்டு வந்துருங்கோ. செத்த நாழில போய் வாழமரம் கொண்டு வந்தா கணும். போங்கோ... போங்கோ!'' விசிறி மட்டையைத் திருப்பிப் பிடித்து முதுகைச் சொறிந்தபடியே ரமணி அய்யர் விரைவு படுத்தினார்.

''ஏன்னா! இந்தாங்கோ காபி கூட குடிக்காம வந்துட்டேள் ஒரு முட்டை நெய் ஊத்தி பெசஞ்சி திங்கவே தெண றுவேள்... நீங்க பாட்டும் மூட்டைய



படிப்பகம்

www.padippakam.com

தூக்குறேன், கல்ல பேக்குறேன்னு முந்தி முந்திண்டு நிக்காதேள், ஏற்கெனவே நாலு நாளா கழுத்த வலிக்கறதுண்ணு ராத்திரில பெனாத்துறா, சொன்னா கேக்கவே மாட்டார் சுந்தரமூர்த்தி'' மாமி பொரிந்து தள்ள ''சார் நீங்க பேசாம இருங்க நான் வந்திடறேன்'' என்று நாற்காலியில் குத்துக்கல் மாதிரிக் குந்தியிருந்த ரமணி அய்யரிடம் விடை பெற்றான் சுந்தரமூர்த்தி.

●○●

''என்னங்க, நானும் பாக்குறேன், பத்துநாளா வர்றீங்க, போறீங்க. சரியா சாப்புடறதுமில்ல, தூங்கறதுமில்ல. உங்க மனசுல என்னா நெனச்சுகிட்டு இருக்கீங்க மூஞ்ச பாத்தீங்களா உள்ள போய் கண்ணாடில பாருங்க நல்லா கோயில் கட்டி கும்பாபிஷேகம் பண்ணீங்க.''

''தே! சும்மா கத்தாத. யாராவது வரப்போறீங்க, தப்பா எடுத்துப்பாங்க! ஏண்டி இப்படி யார் வீட்டு வேலையோ மாதிரி பேசுற, நம்ம நகர் புள்ளையார் கோயிலுக்குத்தானே, அதுவும் சாமி காரியத்த இப்படி துக்கிரித்தனமா பேசாத ஆமாம்'', சுந்தரமூர்த்தி புரியாத மனைவிக்குப் புரிய வைப்பதுபோல விளக்கினான். ''இங்க பாரு இவ்வளவு நாளு மெனக்கெட்டது பெரிசு இல்ல. இன்னைக்கு கும்பாபிஷேகம் வரைக்கும் நான் இருந்தாகணும். இதெல்லாம் ஒரு பொது சேவை மாதிரி தெரியுமா? நம்ம வெங்கட்ராமய்யர் போல ஆளுங்கெல்லாம் என்னமா பாராட்டுறாங்க தெரியுமா! இன்னைக்கு கும்பாபிஷேகத்துக்கு இன்கம்டாக்ஸ் ஆபீஸ்லேர்ந்து ஆபிசர் கூட வர்றார் தெரியுமா? உனக்குச் சொன்னாலும் புரியாது?''

''ஆமாம்! ஆமாம்! நேத்து ஜட்ஜ் வந்து சட்டி நெறைஞ்சிடுச்சி, இன்னைக்கு இன்கம்டாக்சு வந்து எரவாணத்துலேர்ந்து கொட்டப் போகுது. உங்ககிட்டப் பேசவே முடியாது'' ராணி கடுப்பாகிப் போனாள். ''சட்டி நெறையருதுலேயே இரு, உனக்கு காசு பணம் இருந்தா போதும் ஒரு மரியாதை, கவுரவம் பற்றியெல்லாம் கவலைப்படாத, சரி சரி நாழியாகுது நான் வர்றேன். அப்புறமேயாவது கோயிலுக்கு வா! என்ன?'' அதட்டலாய்ப் பேசிவிட்டு நடையைக் கட்டினான் சுந்தரமூர்த்தி.

''என்ன கும்பாபிஷேக நேரத்துல ஆளக் காணோமேன்னு நெனச்சேன் வாங்கோ! வாங்கோ!'' வெங்கட்ராமய்யர் விரைந்து வரவேற்க மகிழ்ச்சியானது சுந்தரமூர்த்திக்கு. ஊரிலிருந்து வந்திருந்த உறவினர் கூட்டத்துடன் கோயிலின் மேல் விதானத்தில் நின்றிருந்த ரமணி அய்யர் புன்னகைத்தவாறே கீழே இறங்கி வந்தார். மனநிறைவுடன் அவரைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டான் சுந்தரமூர்த்தி. கீழே வந்தவர் வேகமாக அவனைக் கடந்து போக திரும்பிப் பார்த்தான். வேகமாக வந்து ஒரு வெள்ளை நிற டாடா சுமோ நின்றது. அதிலிருந்து நிதானமாக இறங்கிய ஆண்களும் பெண்களும், முகத்தைவிட அணிந்திருந்த உடைகளும் நகைகளும் பளிச்சிட, நேராகப் பார்க்கவே கூசிப்போய் முகத்தை உற்றுப் பார்க்க ஆரம்பித்தான் சுந்தர மூர்த்தி.

> **''இந்த அய்யிருங்களுக்கு இதே வேலெ. ஏதாவது கோயில் விசேசம்னு மாசாமாசம் வரி போலக் காசு கேப்பாங்க. இவுரு பாஞ்சிட்டுபோய் தலையாட்டு வாரு. அப்புறம் நகர் சங்கம் அது இதுன்னு அதுக்கு வேற தனியா! ஏண்டா நகர்ல எடத்த வாங்குனோம்னு இருக்கு''**

''வாங்கோ, வாங்கோ, பெரியவா குடும்பத்தோட வர்றது ஈஸ்வரன், ஈஸ்வரி சகிதமா வந்து தெய்வகடாட்சம் தந்த மாதிரின்னா இருக்கு'' வெங்கட்ராமய்யர் பட்டுவேட்டிக்காரரை உபசரித்துக் குனிய ''வாங்கோ! வாங்கோ!'' என்று ரமணியும், ராமமூர்த்தியும் சேர்ந்து கொண்டனர். அவருக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தைப் பார்த்து அவர்தான் இன்கம்டாக்ஸ் ஆபீசர் என்று புரிந்து கொண்டான் சுந்தரமூர்த்தி.

''எங்க, பெரியவா வராம போயிடுவேளோன்னு பதறிண்டே இருந்தோம் சரியான நேரத்துல வந்துட்டேள். ஹி..ஹி... வாங்கோ மேலப் போகலாம்...'' பேசிக் கொண்டே வரிசையாக நின்றவர்களிடம் ஆபீசரை அழைத்துக்கொண்டு போனார் வெங்கட்ராமய்யர்.

''இவர்தான் ரமணி அய்யர் எக்ஸ் கர்ணம், நம்ம குத்தாலம் கோபால் வகையறா, ரெண்டும் பெண் கொழந்தைகள். ரெண்டு கொழந்தைகளும் பி.காம் பண்ணிட்டு, கம்ப்யூட்டர் எம்.எஸ் ஆபீசெல்லாம்கூட முடிச்சிண்டு வீட்ல சும்மாதான் இருக்கா.,. வேல தேடிண்டு. ஏய் கீதா, உமா வாங்க பெரியவாகிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்கிங்க, வாடி.'' ரமணி அய்யரின் மனைவி உதட்டைச் சுழித்து அவசரமாக அழைத்தாள்.

மீண்டும் வெங்கட்ராமய்யர் ராமமூர்த்தி அய்யரையும் காண்பித்து ''இவர்தான் ராமமூர்த்தி அய்யர், சொல்லப்படாது, நம்ம காஞ்சி சின்ன பெரியவா இருக்குறாளோ இல்லயோ அவருக்கு இவா தூரத்து ரிலேசன்ல வருவா'' பேசிக் கொண்டே வந்தவர் தள்ளி நின்ற சுந்தரமூர்த்தியைப் பார்த்து ''சுந்தரமூர்த்தி இங்க வாங்கோ'' என்று அவசரமாகக் கூப்பிட, தம்மை ஆபீசருக்கு அறிமுகப் படுத்தப் போகிறார் என்று பெருமிதத்தோடு அதே சமயம் சற்றுக் கூச்சத்துடன் நெருங்கினான் சுந்தரமூர்த்தி.

''என்ன சுந்தரமூர்த்தி இங்கேயே மசமசன்னு நிக்கிறேள். வேகமா அப்புடியே காம்பவுண்டுக்கு வெளியில போயி கெணத்துலேர்ந்து ஜலத்த மொண்டு மொண்டு குடுங்கோ. ஜலம் பத்தாது நன்னா கலசம் குளிரணும். என்னாச்சு இன்னைக்கு ஸ்லோ மோஷன்ல இருக்கேள்... போங்கோ! போங்கோ! சீக்கிரம்.'' வெங்கட்ராமய்யர் உரிமையுடன் விரட்ட ஒரு கணம் சுந்தரமூர்த்தி மலைத்துப் போனான்.

''எல்லா வேலையும் தலையில இழுத்துப் போட்டுண்டு வெங்கட்ராமய்யர் ரொம்ப சிரமப்பட்டுட்டார் சார்!'' ரமணி ஆபீசரிடம் நெருங்கிக் கூறிக் கொண்டிருந்தார்.

''சார் இன்னைக்கு இந்த நகர்ல இந்த கோயில் பிரசன்னமாகி, இந்த அளவுக்கு கும்பாபிஷேகம் விமர்சையா நடக்கிறதுன்னா அதுக்கு மூலகாரணமே இவர்தான் போங்கோ, இந்த ரமணியோ ராமமூர்த்தியோ இல்லேன்னா இந்தக் கும்பாபிஷேகத்தையே இவ்ளோ சுருக்கா நடத்தியிருக்க முடியாது'' வெங்கட்ராமய்யர் பதிலுக்குப் பக்கத்திலிருந்த ரமணி அய்யரையும், ராமமூர்த்தி அய்யரையும் காட்டிப் பலமாகச் சிரித்தார்.

இதைக் காதில் வாங்கியபடி கிணற்றில் தண்ணீர் வாளியை வேகவேகமாக இழுத்துக் கொண்டிருந்த சுந்தரமூர்த்தி தண்ணீர் சுட்டது போல வெடுக்கென்று குடத்தைப் போட்டுவிட்டுக் கோபுரத்தைப் பார்த்தபடியே நகர்ந்தான்.

கலசத்தில் ஊற்றிய நீரில் கோபுரத்திலிருந்து வர்ணக் கலவையின் சாயம் கரைந்து ஓடிக்கொண்டிருந்தது. ●

## அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகர்களே!**

**தவிர்க்கவியலாத காரணத்தினால் டிசம்பர் மாத புதிய கலாச்சார இதழ் வெளிவராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!


PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN/Chief PMG - 303 / 2002

www.padippakam.com

# இரண்டாம் பதிப்பில்...




ரூ. 50

மதம் மாறினால் தேசிய உணர்வு மாறுமா?

பால்பவுடருக்காக மதம் மாறுவது குற்றமா?

அம்பேத்கர் மதம் மாறியது ஏன்?

'தீண்டாமையை ஏற்றுக்கொள்,
இடஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்'.

கிறித்தவத்தின் 'சீரழிவும்',
இசுலாமிய 'பயங்கரவாதமும்',
பார்ப்பனியத்தின் 'சகிப்புத்தன்மையும்'.

ஆவுரித்துத் தின்னும் புலையரும்
உரிக்காமல் விழுங்கிய புனிதரும்

உயர் பதவிகளில் முசுலீம்கள்,
பார்ப்பனியத்தின் கருணையா?

கிறித்தவ மதமாற்றத்தின் வரலாறு.




ரூ. 40

ஒவ்வொரு காலகட்டத்தின் இசைப் படைப்பும்
அந்த சமூகத்தின் நாடித்துடிப்பையும்
படைப்பாளிகளின் ஆளுமையையும் ஏறத்தாழ
உணர்த்துகிறது.

தரம் தாழ்ந்த நகைச்சுவை உங்களைச் சிரிக்க
வைத்தால்... களிவெறி நடனமும் இசையும்
உங்களை மயங்க வைத்தால்...

உங்களுடைய ரசனையிலிருந்து அந்த ரசனை
உங்களிடம் தோற்றுவிக்கும் உணர்ச்சிகளிலிருந்து

உங்களுக்குள்ளேயே வேறொரு ஆளுமை
உருவாகிறது என்று பொருள்.




ரூ. 20

மதத்தின் அடிப்படையிலான வெவ்வேறு தனிநபர்
சட்டங்கள் தேசத்தின் ஒற்றுமையைக்
குலைத்துவிடும் என்று கேள்வி எழுப்புகிறது
பாரதிய ஜனதா.

அவர்களுக்கு இறைவன் வகுத்தளித்த சட்டங்களை
மாற்றுவதற்கு எந்த மனிதருக்கும் உரிமையில்லை
என்கிறார்கள் இசுலாமிய மதவாதிகள்.

பொதுசிவில் சட்டமொன்றைக் கொண்டு
வருவதற்கேற்ற மத நல்லிணக்க சூழ்நிலை இன்னும்
உருவாகவில்லை என்கிறார்கள் பொதுவான
ஜனநாயகவாதிகள்.

மதச்சார்பின்மை, பொதுசிவில் சட்டம் குறித்த
பிரச்சினைகளுக்கு நமது விடை என்ன?

## பார்ப்பன இந்து மதவெறிக்கெதிரான பாடல் ஒலிப்பேழைகள்




ரூ. 35




ரூ. 35

தொடர்புக்கு:
இரா.சீனிவாசன்,
18, முல்லை நகர் வணிக
வளாகம், 2வது நிழற்சாலை,
அசோக் நகர்,
சென்னை - 600083
☎: 3718706

படிப்பகம்